# தந்தை பெரியார் 123-ஆவது பிறந்தநாள் விழா, காந்தியார் படுகொலை நாள் பொதுக்கூட்டம், சத்தியமங்கலம்.

நிகழ்ச்சியினுடைய தலைவர் தோழர் முத்து அவர்களே, தந்தை பெரியார் திராவிடர் கழகத்தினுடைய பொதுச்செயலாளர் தோழர் இராமகிருட்டிணன் அவர்களே, பொறுப்பாளர்களே, கழகத் தோழர்களே, சத்தியமங்கலம் வாழ் பொதுமக்களே அனைவருக்கும் வணக்கம். இன்று சத்தியமங்கலம் தந்தை பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் தந்தை பெரியாருடைய 123-ஆவது பிறந்தநாள் விழா, காந்தியார் படுகொலை நாள் ஆகியவற்றை முன்னிறுத்தி இக்கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த கூட்டம் இரண்டு மாதங்களுக்கு முன்னால் நடந்திருக்கவேண்டியது. தந்தை பெரியாருடைய 123-ஆவது பிறந்த நாள் விழா, தேநீர் கடைகளில் இரட்டைக் குவளை ஒழிப்பு ஆகியவற்றை முன் வைத்து கொடியேற்றங்களும், பொதுக்கூட்டங்களும் நடத்துவதாக திட்டமிட்டு காவல் துறைக்கு அனுமதிகேட்ட செய்திகளைக் சொன்னார்கள். காவல் துறை பதில் கொடுத்தது. என்ன பதில் கொடுத்தது என்றால் “சத்தியமங்கலம் உபகோட்டம், பங்களாபுதுர் காவல் நிலைய சரகத்தைச் சார்ந்த கெம்மநாயக்கன்பாளையம், தாசப்பக் கவுண்டன் புதூர், கொடிவேரி ஆகிய இடங்களிலும் சத்திய மங்கலம் காவல் நிலைய சரகம் வடக்குப்பேட்டை, கோட்டு வீரான்பாளையம் ஆகிய இடங்களிலும் இந்து மதத்தின்பேரில் தீவிர பற்றுக்கொண்டவர்கள் அதிகம் வசிப்பதால் மேற்படி ஊர் வழியாகவும், உமது கட்சியைச் சார்ந்தவர்கள் இந்து மதத்தைத் தாக்கி கோ-ம் போட்டுக்கொண்டு வரும் போது சட்ட ஒழங்கு சீர்கெடும் சூழல் ஏற்படும் நிலை உள்ளதால் அந்த கூட்டத்தை நடத்த அனுமதி மறுக்கப்படுகிறது’’ என்று பதில் கொடுத்தார்கள். அதனால் அந்த கூட்டம் நடத்த முடியவில்லை.

இப்போதெல்லாம் தீவிரவாதத்தை கட்டுப்படுத்துகிறோம், ஒழிக்கிறோம் கைது செய்யப்போகிறோம் என்று நாள் தோறும் சொல்கிறார்கள். நம்முடைய காவல்துறை துணைக் கண்காணிப் பாளரே சொல்லியிருக்கிறார். எங்கெல்லாம் இந்து மதத்தின்மேல் தீவிர பற்றுக்கொண்ட தீவிரவாதிகள் இருக்கிறார்கள் என்பதை

அவர் பட்டியல் போட்டுக் காட்டியிருக்கிறார். அவர் அதையெல்லாம் கொஞ்சம் கண்காணித்துக்கொண்டு இருக்க வேண்டும். ஏனென்றால் எங்காவது ஏதாவது நடந்தால் இந்த ஊரில் இந்து மதத்தின் மீது தீவிர பற்றுக்கொண்டவர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு நம்முடைய காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் ஒரு சான்றிதழ் கொடுத்திருக்கிறார். அவ்வாறு அனுமதி மறுத்ததை உயர் நீதிமன்றத்திற்கு கொண்டுபோனோம் முதலில் நம் காவல் துறைக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறோம்.

ஒரு இடத்திற்கு, ஒரு பதவிக்கு வந்த உடனே அங்கு எந்தெந்த மாமூல் எவ்வளவு வருகிறது என்று பட்டியல் எடுக்கிற அதே அக்கறை என்னென்ன விதிமுறைகள் உள்ளன, அதை பயன்படுத்தி மக்களுக்கு என்னென்ன நன்மை செய்யலாம் என்பதில் இருப்பதில்லை, நம் அதிகாரிகளுக்கு. அதுதான் ஒரு பெரிய சிக்கல். கூட்டத்திற்கு அனுமதி என்பது, அடிப்படை உரிமை. கூட்டம் கூடும் உரிமை, கருத்து தெரிவிக்கும் உரிமை இவையெல்லாம் அடிப்படை உரிமைகளில் ஒன்று. கூட்டம் கூடுவதற்கு காவல் துறையின் அனுமதி தேவையில்லை. முதலில் அதை காவல்துறை புரிந்துகொள்ளவேண்டும். நீங்கள் எதற்காவது அனுமதி தரவேண்டும் என்றால் ஒலிபெருக்கி அமைக்க மட்டுமே உங்களிடம் அனுமதிபெறவேண்டுமே தவிர கூட்டம் கூடுவதற்கு காவல் துறையிடம் அனுமதிபெற வேண்டிய அவசியமே இல்லை என்பதை முதலில் அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். அப்படியே அனுமதிகேட்டால் காரணத்தோடு மறுப்பு சொல்லவேண்டும்.

இந்து தீவிரவாதிகள் இருக்காங்க இந்த ஊர்வழியாக செல்லக்கூடாது என்கிறீர்கள். இந்த பகுதியிலே திருடர்கள் இருப்பதால் இந்த ஊரில் பொதுமக்கள் வசிக்கக் கூடாது என்று கூட நாளைக்கு சொல்லுவார்கள். எனக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று கேட்டால் இல்லை, இல்லை இந்த ஊரில் திருடர்கள் இருப்பதால் இந்த பகுதியில் வசிப்பது. தடை செய்யப்பட்டிருக்கிறது என்று கூட சொல்லுவார்கள். ஏய்யா, உங்களுக்கு என்னய்யா வேலை சட்டம் ஒழுங்கு சீர்குலையும் என்றால் அதை காப்பாற்றுவதற்காகத் தான் (To Maintan Law and Order) இதற்குத் தான் உங்களை வைத்திருக்கிறார்கள். நீங்கள் அதை



செய்வதை விட்டுவிட்டு இதை செய்யாதே, அதை செய்யாதே என்றால், கூட்டம் கூடினால் சட்டம் ஒழுங்கு குலைந்துவிடும்; பொதுமக்கள் சந்தையில் கூடினால் பிக்பாக் கெட்காரன் பிக்பாக் கெட் அடித்துவிடுவான் எனவே அங்கு சந்தை கூடக்கூடாது ஏனென்றால் பிக்பாக்கெட்காரன் பிக்பாக்கெட் அடித்து விடுவான் இதற்கா காவல் துறை, எனவேதான் உயர் நீதிமன்றத்தில் சொல்லிட்டாங்க. கூட்டம் நடக்கட்டுமய்யா (You are at Libert) அதாவது உயர் நீதிமன்றம் சொன்னது கூட்டம் கூடுவதை வேண்டாம் என்று சொல்லாதய்யா, கூட்டம் கூடி அவன் ஏதாவது தப்பு பண்ணினான நீ சொல்லுகிற மாதிரி தப்பான முழக்கம் போட்டால் அதற்கு வழக்குப் போடுவதற்கு உரிமை இருக்கிறது. ஏய்யா தடுக்கிற என்று உயர் நீதிமன்றம் சொன்னது. பிறகு கூட்டத்திற்கு அனுமதி தந்ததார்கள். அந்த செய்தியை உங்களுக்குச் சொல்லிவிட்டு, பொதுமக்களுக்கு சொல்வது போல் காவல் துறைக்கும், காவல்துறைக்கு சொல்வதுபோல் பொதுமக்களுக்கும் சில செய்திகளைச் சொல்லவேண்டும்.

பெரியார் யார்? முதலில் அதைச் சொல்லவேண்டும், பெரியார் இந்த சமுதாயத்திற்கு ஆற்றிய பணிகள் என்ன என்பதை புரிந்துகொள்ளவேண்டும். அவர் இந்து மத எதிரி இந்துதுவத்தை அழிக்க வந்தவர், கடவுள் மறுப்பாளர், பார்ப்பன எதிர்ப்பாளர் இதைத் தான் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அது உண்மையும் தான். ஆனால் அவரால் என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறது என்பது தெரிந்துகொள்ளவேண்டும்.

இங்கு காவல்துறைக்காரர்கள் வந்திருப்பதாக சொன்னார்கள் ஒரு செய்தியை முதலில் காவல்துறை என்பதற்காக ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒரு காலத்தில் சில சமுதாயங்களை குற்றப் பரம்பரையினர் என்று ஒதுக்கி வைத்திருந்தார்கள். இவர்கள் எல்லாம் குற்றம் செய்யும் பரம்பரையினர். இவர்கள் செய்துத்தான் தீர்வார்கள். எனவே இந்த சாதியில் பிறந்து விட்டாலே அப்படிப்பட்ட சமுதாயத்தை சார்ந்த பெற்றோர்களுக்குப் பிறந்துவிட்டாலே அவன் கண்காணிப்புக்கு உரியவன் என்று வைத்திருந்தார்கள் சில சாதியினரை. அவர்கள் காலை வேளையிலே காவல் நிலையத்தில் கையயழுத்திடவேண்டும் என்று வைத்திருந்தார்கள். ஒரு வேளை திருமணத்திற்கோ, சாவிற்கோ வெளியூர் செல்லவேண்டும் என்றால் காவல்

நிலையத்தில் சொல்லிவிட்டுப் போகவேண்டும். இவர்கள் அந்த காவல் நிலையத்திற்கு அறிவிப்பு கொடுப்பார்கள். மணி சத்தியமங்கலத்திற்கு நாளை வருகிறார் என்று அறிவிப்பு கொடுப்பார்கள். நான் அங்குப் போய் கையயழுத்திட வேண்டும். குற்றப்பரம்பரை சட்ட கைரேகை சட்டம் என்று வைத்திருந்தார்கள்.

அது நீதிகட்சி ஆட்சியிலேதான் தந்தை பெரியார் போன்றோரின் போராட்டத்திற்குப் பின்னால்தான் நீக்கப் பட்டது. அப்படிப்பட்ட காலை, மாலை வேளையில் கையயழுத்திட வேண்டும் என்று சொன்ன சமுதாயத்தில் பிறந்த பரமகுரு என்பவர்தான் ஐ.ஜி. யாக இருந்தார். அதைக் கொண்டுவரக் காரணம் பெரியார் இயக்கம். கையெழுத்துப் போடவேண்டிய சமுதாயத்தில் தான் இதை இரத்தினவேல் பாண்டியன் சொன்னார். அவர் உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்தபோது மண்டல் குழு வழக்கு வந்தது, அந்த வழக்கு வந்தபோது. இப்படிப்பட்ட இட ஒதுக்கீடு சட்ட விரோதம் என்று வாதாடினார். அப்போது உச்ச நீதிமன்றத்தில், திறந்த நீதிமன்றத்தில் நீதிபதி இரத்தினவேல் பாண்டியன் கேட்டார் காலை, மாலை வேளையில் கையெழுத்திடவேண்டும் என்று சொன்ன சாதியில் பிறந்த நான் உச்ச நீதிமன்ற நீதிபதியாக அமர்ந்துகொண்டு உங்களுக்கு நீதி சொல்லிக் கொண்டிருக் கிறேன். இதற்கு காரணம் பெரியார் பெற்றுத் தந்த இடஒதுக்கீடு என்று நான் நம்புகிறேன். இது தவறு என்றால் என்னை கன்வின்ஸ் பண்ணு (Convence me) இதை தவறு என்று சொல்லு. இந்த மண்டல் குழு செல்லாது என்று ஆணையிடுகிறேன் என்று நீதிமன்றத்தில் சொன்னார் இரத்தினவேல் பாண்டியன். அப்படி உச்சநீதிமன்ற நீதிபதியாக, காவல் துறையினுடைய தலைமை அதிகாரியாக வரக்காரணமாக இருந்தவர் தந்தை பெரியார். இப்படி பல எடுத்துக்காட்டுகளைச் சொல்லலாம்.

அவர் மட்டுமில்லை ஆர்.கே. சண்முகம் செட்டியார் என்பரை கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்த விடுதலைப் பெற்ற இந்தியாவினுடைய முதல் நிதி அமைச்சர். காங்கிரஸ் ஆட்சியல் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டவர். ஆனால் அவர் காங்கிரஸ்காரர் இல்லை. அதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். அவர் காங்கிரசுக்கு நேர் எதிரியான நீதிகட்சியை சேர்ந்தவர். தமிழ்நாட்டில் நீதிக்கட்சியினுடைய



உறுப்பினரான சர் ஆர்.கே. சண்முகஞ் செட்டியார்தான் இந்திய நாட்டின் முதல் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டார். காரணம் என்ன? இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் உள்ள நிதி வரவு செலவுகளை, (Sterling Balance) என்று சொல்வார்கள். அதை நிர்ணயிப்பதற்கு யாரை அனுப்பலாம் என்று இந்திய அரசு ஆலோசித்தது. அப்பொழுது நேருவைச் சொன்னார்கள். நீங்கள் போய் பேசுங்கள் என்று சொன்னார்கள். அப்பொழுது நேரு சொன்னார் (I am either a states man not an Econamist) நான் ஒரு உயர்ந்த அரசியல் நிபுணரும் இல்லை, பெரிய பொருளாதார நிபுணரும் இல்லை. நான் போய் என்ன செய்வது என்று சொன்னார்கள். யாரை தேர்ந்தெடுப்பது என்று ஆய்ந்து ஆலோசித்த பின் தான் சர் ஆர்.கே. சண்முக செட்டியாரை அனுப்பி வைத்தார்கள். அவர்போய் நிதிக்கணக்கை முடித்து வைத்துவிட்டு வந்தார். பின் நிதியமைச்சராக இருந்தார். காரணம் பொருளாதாரத்தில் அவ்வளவு நிபுணத்துவம் வாய்ந்தவர். எதிர்க்கட்சியினராக இருந்தாலும் அந்த இடத்தில் அமரத்தக்க யோக்கியதை அவருக்குத்தான் இருந்தது என்று அகில இந்தியாவிலிருந்து ஒருவரை தேர்ந்தெடுத்தனர். அந்த ஆர்.கே. சண்முகசெட்டியாரை பழனி கோவிலுக்கு செல்லக்கூடாது என்றான். நீ வாணியர் சாதி எண்ணெய் ஆட்டுகிற சாதி, இழி சாதி மண்டபத்திற்குள்ளே போகக்கூடாது என்று சொல்லிவிட்டான். அதற்கு பெரியார் போராட்டம் நடத்தினார்.

எஸ்.வி. இராமசாமி செட்டியார். பாரிஸ்டர் அவர் சேலத்துக்காரர். சாரதாக் கல்லூரி அதிபர். அவர் திருச்செந் தூருக்குப் போனார் கோவிலுக்குச் சென்று பயபக்தியோடு கும்பிட்டுவிட்டு திருநீறு கேட்டார். பார்ப்பான் கல்லுமேல் தூக்கிப்போட்டுவிட்டு எடுத்துக்கோ என்றான். சூத்திரனுக்கு கையில் தரமுடியாது என்றான். அவர்கள் தான் சாரதா கல்லூரியை நடத்திக்கொண்டு இந்துமதத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அங்கிருந்து வந்தவர் (Bar Assocation) திருச்செந்தூர் வழக்கறிஞர் அவையிலே பேசும்போது சொல்கிறார் நான் ஒரு பாரிஸ்டர் இந்த நாட்டினுடைய இரயில்வே துறை அமைச்சர். என்னை இழிவுபடுத்திவிட்டார்கள் என்று பேசினார். பெரியார் தமிழ்நாடு முழுவதும் போராட்டம் நடத்தி எதிர்ப்பு தெரிவித்தார்.

அதற்குப்பின்னால் பெரியாரின் வழிவந்த, அறநிலையத் துறை அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அதே கோயிலுக்கு அமைச்சராக போனார். நெடுஞ்செழியன் கையில் திருநீறு கொடுத்தனர். அதை வாங்கி இவர் கல்லின்மேல் போட்டு விட்டார். எஸ்.வி. இராமசாமி கேட்டதற்கு கல்லுமேல போட்டான். இவர் அவன் கொடுத்ததை தூக்கி கல்லுமேல போட்டார். உடனே சட்டமன்றத்தில் கேள்வி கேட்பதற்கென்றே இருந்த ஒரு கூட்டம் இப்படியெல்லாம் செய்யலாமா என்று குதித்தார்கள். உடனே நெடுஞ்செழியன் சொன்னார் ஆண்ட வனுக்கு சக்தி இருக்கிறதா என்று ஆராய்வதல்ல அறநிலையத் துறை அமைச்சரின் வேலை, அளந்து கொடுக்கிற ஐந்து மரக்காலில் இரண்டு மரக்கால் அர்ச்சகர் வீட்டிற்கு செல்லாமல் இருக்கிறதா என்று பார்ப்பதுதான் என்னுடைய வேலை. போடா கடவுள் உண்டா, இல்லையா என்பதை பார்ப்பதா என் வேலை, நீ திருட்டுத்தனம் செய்கிறாயா என்பதை பார்ப்பதுதான் என் வேலை. என விளக்கம் சொன்னார். இந்த மாற்றம் பெரியாரால் நிகழ்ந்தது.

பலபேருக்கு மரியாதை பெற்றுத் தந்தவர் பெரியார். அவர் மட்டுமல்ல, பாபு ஜெகஜீவன் ராம் அவர் என்ன சாதாரண நிலையில் இருந்தவரா? எத்தனையோ ஆண்டுகள் அமைச்சராக இருந்தவர். நிருபர்களுக்குக் அழகான ஆங்கிலத்தில் சிறப்பான பதிலை கொடுக்கக்கூடிய ஆற்றல் மிக்கத் தலைவர் அவர். அவருடைய ஆங்கிலத்தைக்கண்டு வியக்காதவர் யாரும் இல்லை. அந்த அளவு ஆங்கிலத்தில் புலமை பெற்றவர். அரசியல் அறிவு பெற்றவர். பணத்தில் வளம்மிக்கவர். வருமானவரி கட்டுவதைக் கூட மறந்துவிட்டேன் என்று கூட ஒருமுறை சொன்னவர். அவ்வளவு பெரிய வசதிமிக்கவர். இராணுவ அமைச்சராக இருந்தார் அவர் காசி பல்கலைக்கழகத்திற்குப் போய் சம்பூரணா னந்த் என்கிற ஒரு பார்ப்பனர் சிலையைத் திறந்துவைத்தார். சிலையை திறந்துவைப்பதற்கு அங்குள்ள பார்ப்பன மாணவர்கள் எல்லாம் சக்கிலியெல்லாம் சிலையை திறந்தால் செருப்பு தைப்பது யார் என்று முழக்கம்போட்டு எதிர்த்தார்கள். அதையும் மீறி திறந்து வைத்தார். அப்படி திறந்து வைக்கிறபோது கூட சிலையை கட்டிப்பிடித்தெல்லாம் திறக்கவில்லை. மேடையில் இருந்து ஒரு பொத்தானை அமுக்கினார் மின்சாரம் சென்று திரை விலகியது. அதற்கே சிலை தீட்டாகிவிட்டது என்று சொல்லி கங்கை



நீரைக்கொண்டு வந்து குளிப்பாட்டினார்கள். அப்படிப்பட்ட நிலை அங்கிருந்தது. அந்த அவமானத்தை கூட ஜெகஜீவன் ராம் தமிழ்நாட்டுக்கு வந்துதான் பேசி கண்டிக்க முடிந்தது.

ஆனால் இங்கு அந்த நிலை இருந்ததா மராட்டியத்தில். அம்பேத்கர் பெயரை அங்கிருந்த பல்கலைக்கழகத்திற்கு வைக்க முடியவில்லை. இங்குதான் அம்பேத்கர் பெயரை மாவட்டத்திற்கு, சட்டக்கல்லூரிக்கு வைக்கப்பட்டது. அவர் பிறந்த மராட்டியத்தில் அவர் பெயரை வைக்க முடியவில்லை. இப்படியெல்லாம் இந்த தமிழ்நாட்டை பண்படுத்தி வைத்திருந்தார் பெரியார். நம்மவர்கள் ஒவ்வொரு நிலையிலும் இழிபடுத்தப்பட்டார்கள் பல வகையிலே. பல இடங்களில் இழிவுபடுத்தப்பட்டார்கள். ஒன்றுமில்லை துண்டு போட முடியாதே நாம் தோள்ல. ஒரு காலத்தில் துண்டுகூட போட முடியாத நிலையில் வைத்திருந்தார்கள். மதுரை சிவக்கொழுந்து என்பவரை கேள்விபட்டிருப்பீர்கள். அவர் ஒரு நாதசுவர வித்வான். தோளில் துண்டு போடக்கூடாது என்று சொன்னார்கள். இடுப்பில்தான் துண்டு கட்டிக்கொண்டு வாசிக்கனும் என்று தகராறு பண்ணினார்கள். அஞ்சா நெஞ்சன் அழகிரி போய் எதிர்த்தார். 1920 ல் ரூ.1000 ம் வாங்கிக்கொண்டு வாசிக்கிறவர் நிகழ்ச்சிக்கு நான் வந்திருக்கிறேன். என்ன செய்வது என்று சிவக்கொழுந்து பெரியாரிடம் கேட்டார். கஞ்சன் பெரியார் சொன்னார் 1000 ரூபாய் நான் தருகிறேன் துண்டை தோளில் போட்டு வாசி என்று பெரியார் சொன்னார். துண்டை தோளில் இருந்து எடுக்கமாட்டேன் என்று உறுதியாய் சொல்லு நான் 1000 ரூபாய் தருகிறேன் என்று கஞ்சன் பெரியார் தான் சொன்னார். காரணம் மானத்தைக் காப்பாற்றுவதற்காகதான் உடனே துண்டு போட்டார்கள். இன்று இசை வேளாளர் சமுதாயத்திலே ஏராளமான பேர் தரைமோதும் அளவிற்கு துண்டு போட்டுப்போகிறார்கள். இந்த இடுப்பிலிருந்து வந்த துண்டு கக்கத்திற்கு வந்து தோளுக்கு வருவதற்கு நூற்றாண்டுக்கணக்காக போராட்டங்கள் நடந்திருக்கின்றன.

இவையெல்லாம் நிறைவேற காரணமாக இருந்தவர் பெரியார். இந்த ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் உரிமைக்கு இந்த மக்கள் உழைக்கும் மக்கள் கல்வியிலே, வேலை வாய்ப்பிலே எந்த உரிமையும் அற்றவர்களாக, எல்லாப் பதவிகளும் பார்ப்பனர் களுக்கே என இருந்த நிலையில்தான் பெரியார் பொதுவாழ்விற்கு

வருகிறார். மாற்றம் காண்கிறார் பெரியார் எத்தனையோ செய்திகள் எல்லாம் சொன்னார்கள் காந்தி தமிழ்நாடு வந்தபோது அவரை வெளியில் வைத்து சோறு போட்டனர்.

"தமிழ்நாட்டில் காந்தி'' என்று ஒரு புத்தகத்தை நவ ஜோதி பதிப்பகம் வெளியிட்டுள்ளது. அதை படித்தால் தெரியும். காந்தி மூன்று வேளை இங்கேயே சாப்பிடுகிறார். முதல் வேளை சோறு போட்ட இலை அப்படியே மடித்து வைத்துவிட்டு அதில் எறும்பு ஊர்ந்துக்கொண்டிருக்க அதற்கு பக்கத்தில் இன்னொரு இலைப் போட்டு மத்தியான சோறுப் போட்டான் காந்திக்கு பிறகு இரவு உணவும் அந்த இலைக்குப் பக்கத்திலேயே இன்னொரு இலையைப் போட்டு சோறு போட்டான். இரண்டு எச்சில் இலைகள் பக்கத்தில் இருக்க மூன்றாவது இலையில் சோறு சாப்பிட்டார் காந்தி. இந்த நாட்டிற்கு விடுதலை வாங்கிக் கொடுத்ததாக சொல்லப்பட்ட காந்திக்கு அன்றைக்கு தமிழ்நாட்டு பார்ப்பனர்கள் கொடுத்த மரியாதை அவ்வளவுதான். சுயமரியாதை இயக்கம் தோன்றி, பெரியார் தோன்றி உழைத்தப் பின்னால் தான் சமையல் அறைவரைப் போனார் காரணம் அவரது முன்னாள் சிஷ்யன் இராமசாமி நாயக்கரின் சுயமரியாதை இயக்கம். இது தமிழ்நாட்டில் காந்தி என்ற புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இப்படி மக்கள் மத்தியில் அறிவியக்கப் பிரச்சாரம் செய்ய தேடிவந்து அனுமதி தராமல் தடையாக இருக்கிறார்கள் என்பது சங்கடமாக இருக்கிறது. இதை செய்வது தமிழன் என்று சொன்னார்கள். பெரியாரே சொல்லியிருக்கிறார். பார்ப்பா னுக்கும் தமிழனுக்கும் உள்ள வேறுபாட்டை பார்ப்பான் புலி மாதிரி தமிழன் புலி வேசம் போட்டவன் மாதிரி என்றார். புலி எப்பொழுதும் நாட்டிற்குள் வர பயப்படும். ஆனால் புலி வேசம் போட்டவன் நாட்டிற்குள், ஊருக்குள், தெருவுக்குள் வந்து தான் ஆடுவான். புலி தப்பட்டை அடித்தால் ஓடிவிடும். புலி வேசம் போட்டவன் தப்பட்டை அடித்தால் நன்றாக ஆடுவான். புலி தீப்பந்தத்தைக் காட்டினல் ஓடிவிடும். இவன் தீ பந்தத்தை கையில் வைத்து ஆட்டம் ஆடுவான். இது தான் பார்ப்பன அதிகாரி களுக்கும், பார்ப்பன வேசமிடும் தமிழ் அதிகாரிக்கும் உள்ள வேறுபாடு என பெரியார் சொன்னார். இதுதான் புலிக்கும், புலி வேசம் போட்டவனுக்கும் உள்ள வேறுபாடு என்றார்.



இப்படித்தான் நம்ம தமிழ் அதிகாரிகள் இருக்கிறார். அவர்களுக் காக நாம் வருத்தப்படுவோம். அவர்களுக்கு சட்டப்படி நடப்பதாக இருந்தால் சில செய்திகளைச் சொல்லவேண்டும். இப்பொழுது சாலை மறித்து எல்லாம் கூட்டம் போடக்கூடாது என்று உச்சநீதிமன்ற தீர்ப்பு வந்துவிட்டதாக சொல்லுகிறார்கள். இது வழக்கறிஞர்களுக்குத்தான் தெரியும். அது சட்ட தீர்ப்பு திரட்டிலே அது பதிவாகி இன்னும் வரவில்லை. அதற்குள்ளேயே அனுமதி தருவதற்கு மறுக்கிறார்கள். ஆனால் தமிழ்நாடு அரசு அதைப்பற்றி முடிவெடுக்க 6 மாதங்கள் அவகாசம் கேட்டிருக் கிறது. இந்த நிலையில் தான் அனுமதி தர மறுத்திருக்கிறார்கள். ஆனால், தீர்ப்பே வந்துவிட்ட ஒரு செய்தியை சொல்கிறேன்.

இது உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு (Church of God in India ) அதற்கும் சென்னை K.K.R. Majestic Colony Welfare Association என்ற அமைப்புக்கும் நடந்த ஒரு வழக்கு எப்போது தீர்ப்பாயிருக்கிறது என்றால் 30-08-2000 தில் தீர்பாயிருக்கிறது. Supreme Todayஎன்ற தீர்ப்பு தொகுப்பில் பதிவு செய்திருக் கிறார்கள். அந்த தீர்ப்பில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் ஒலி பெருக்கியை அனுமதியில்லாமல் பகல் நேரத்தில் ஒலிக்கக்கூடாது. அதற்கு எவ்வளவு டெசிபல் வைக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். தொழிற்சாலைப் பகுதியாக இருந்தால் 75 டெசிபலும், வாணிப பகுதியாக இருந்தாலும் 65 டெசிபலும், குடியிருப்பு பகுதியாக இருந்தால் 55 டெசிபலும், அமைதிப் பகுதியில் ( மருத்துவமனை, கல்வி நிலையம் உள்ள பகுதியில்) 50 டெசிபலும் தான் என்று சொல்கிறார்கள். இதை மீறி நீதிமன்றத்திற்குச் சென்றான் நான் சாமி கும்பிடுகிறேன் என்னை தடுத்தால் எப்படி? நான் கடவுளை வணங்குவதற்குத்தானே ஒலி பெருக்கி வைக்கிறேன் என்று உயர் நீதிமன்றத்திற்குப் போனார்கள் பிறகு உச்ச நீதிமன்றத்திற்குப் போனார்கள்.

உச்ச நீதிமன்றம் தீர்ப்பு சொல்லியிருக்கிறது. MB Saw, SN Cukan என்ற இரண்டு நீதிபதிகள் அமர்ந்த ஒரு பெஞ்ச் தீர்ப்பு சொல்லியிருக்கிறது. என்ன சொன்னார்கள் தெரியுமா ! In the Civilised Soceity in the name of Religionஇந்த மாதிரி செய்யக்கூடாது என்கிறான். ஒரு நாகரிகம் பெற்ற சமுதாயத்தில் கடவுள் பெயரால் இப்படி காட்டுமிராண்டித்தனமெல்லாம் செய்யவேண்டாம் என்று சொல்லி விட்டு பிறகு சொல்லு

கிறார்கள். எந்த மதத்திலும் ஒலி பெருக்கி வைத்தும் மேளம் அடித்தும் தான் கும்பிட வேண்டும் என்று எந்த மத நூலிலும் இல்லை. ஏற்கனவே ஒரு சாமியாரிடம் குஜராத்திலும் நீதிமன்றம் சொன்னது அந்த பழைய தீர்ப்பை படித்துப் பார் என்று சொல்லி விட்டார்கள். காரணம் இளம் குழந்தைகளின் தூக்கத்திற்கும், அதேபோல் தேர்விற்கு தாயாரிப்பதற்கும் கவனம் கூர்மையாக செலுத்த வேண்டும் என்பதற்காக தீர்ப்பில் சொன்னது. அய்யப்பன் கோவில் சமயத்தில் மாணவர்கள் அரையாண்டு தேர்விற்கு படிப்பார்கள் மாரியம்மன் பண்டிகையின் போது முழு ஆண்டு தேர்விற்கு படித்துக் கொண்டிருப்பார்கள் அந்த நேரத்தில் தான் பத்தாம் வகுப்பிற்கும், பன்னிரண்டாம் வகுப்பிற்கும் தேர்வு வரும் அவர்கள் படித்துக்கொண்டிருப்பார்கள் அதற்கெல்லாம் இடையூறு கொடுப்பதை எந்த நீதிமன்றமும் பொறுத்துக்கொள்ள முடியாது. அது தடுக்கப்பட வேண்டும். எப்படிப்பட்டதை செய்யக்கூடாது. அப்படி அனுமதிக்கொடுத்தால் இந்த நீதிமன்றத்தை அவமதிப்பதாக கருதும் என்று சொல்லியிருக் கிறார்கள். இதை அய்யப்பன் கோவிலுக்கு என்ன செய்யப் போகிறார்கள் என்பதை பார்க்கவேண்டும். இதை சரி செய்யா விட்டால் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கலாம் என்று உள்ளோம்.

காந்தி யார்? காந்தியைப் பற்றி எங்களுக்கு என்ன கருத்து? இந்தியாவில் காந்தியை மூன்று பேர் மட்டுமே நண்பர் காந்தியார், தோழர் காந்தியார், திரு காந்தியார் என்று அழைத்தார்கள். மகாத்மா என்று சொன்னதே கிடையாது. ஒருவர் பெரியார், மற்றொருவர் அம்பேத்கர், இன்னொருவர் ஜின்னா. பெரியார் காந்தியை நண்பர் காந்தி, திரு காந்தி என்று கூட்டத்தில் சொல்லுவாரம். உடனே கூட்டத்தில் மகாத்மா என்று காந்தியை சொல்லுங்கள் என்று சத்தத் போடுவார்களாம். உடனே பெரியார் நான் சாதரண ஆத்மாவே இல்லை என்று சொல்லுபவன். மகா ஆத்மாவைப் பற்றி எனக்கென்ன என்று சொல்லுவாராம். அப்பொழுகூட சொல்லுவார்கள் காந்தி மகரிஷியை போல் செய்கிறார்கள். நான் ஒப்புக்கொள்கிறேன். அந்தக் கால மகரிஷிக்கு என்ன அறிவோ அதே அறிவுதான் காந்திக்கும் இருக்கிறது. அவருக்கு மகான் வே-ம் போட்டுவிட்டார்கள் அதை காப்பாற்றிக் கொள்ளவே நேரம் சரியாக இருக்கிறது. இவர் எந்த வேலையட செய்வார். அவருக்கு உயரிய பெரிய மரியாதை இருந்ததாக சொல்லிவிட முடியாது.



காந்திக்கும் பெரியாருக்கும் கொள்கை வேறுபாடு இருந்தது. அதென்னவென்றால் வைக்கம் போராட்டம் தான். 1924 ல் வைக்கம் என்ற ஊரில் ஒரு கோவிலைச் சுற்றியுள்ள நான்கு தெருக்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் அதில் நடக்கக் கூடாது என்று வைத்திருந்தார்கள். டி.கே. மாதவன் என்பவர் ஒரு வழக்கறிஞர். அவரும் தாழ்த்தப்பட்ட ஈழவ சமுதாயத்தை சார்ந்தவர். அவரையும் நடக்கக்கூடாது என்றனர். இதற்கு உடனே போராட்டம் தொடங்கியது அந்த பகுதியைச் சார்ந்த கேரள காங்கிரஸ் கமிட்டி இந்த போராட்டத்தை நடத்தியது. அந்த சமயத்தில் 18 பேரை கைதுசெய்துவிட்டனர். அதில் நீலகண்ட நம்பூதிரி என்ற பார்ப்பனரும் கலந்துகொண்டார். அவரும் கைது செய்யப்பட்டார். அதற்குப் பிறகு அங்கிருந்து பெரியாருக்கு கடிதம் எழுதினார்கள். எங்கள் அனைவரையும் கைது செய்து சிறையில் அடைத்துவிட்டார்கள். எங்களுக்கு அவமானமாக இருக்கிறது. உடனே நீங்கள் வந்து தலைமையேற்று நடத்த வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்த பெரியாருக்கு கடிதம் வந்தது. உடனே இவர் சென்று போராட்டம் நடத்தினார். பெரியாரும் அவரது மனைவி மற்றும் அவரது தங்கை ஆகியோர் கைதாகி கைகளுக்கு விலங்கு போட்டு, காலில் விலங்கு போட்டு கையில் இரும்பு குண்டைக் கொடுத்து நடக்க வைத்தனர் பெரியாரை.

அந்த போராட்டத்திற்கு பெரியார் சென்றபோது அந்த நாட்டினுடைய ஐஜி வந்து வரவேற்றார். ஏன் வரவேற்றார் என்றால் அந்த அரசருக்கு பெரியார் நண்பர். அவர் சென்னை செல்லுகிறபோதெல்லாம் பெரியார் வீட்டிற்கு வந்து தங்கிச் செல்வார். உடனே பெரியார் சொன்னார் என்னை வரவேற்க வேண்டாம் நான் உங்கப் பகுதியில் போராட வந்துள்ளேன் என்றார். பின்னர் இரண்டு முறை பெரியாரை கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த போராட்டம் மாதக்கணக்கில் நடந்தது.பெரியாருக்கு1 மாதம்,6 மாதம் என சிறை தண்டனை கொடுத்தனர். இப்போராட்டம் தொடர்ந்து நடந்தது. தான் நடத்தும் யங் இந்தியா என்ற பத்திரிகையில் வைக்கம் போராட்டத்தைப் பற்றி 98 பக்கம் காந்தியார் எழுதியதில், சத்திய சோதனை எழுதிய அந்த உண்மையான மனிதர் பெரியாரைப் பற்றி ஒரு இடத்தில் கூட எழுதவே இல்லை. அவ்வளவு யோக்கிய மானவர் காந்தி. கடைசியாக காந்தி தான் வைக்கத்தில் உரிமையை வாங்கிக் கொடுத்ததாகச் சொன்னார்கள்.

எந்த ஈழவ சமுதாயத்தைச் சார்ந்த மாதவனை நடக்கக் கூடாது என்று சொன்னார்களோ அதே வைக்கம் தொகுதி யிலிருந்து அதே ஈழவ சமுதாயத்தில் பிறந்தவர்தான் (கே.ஆர். நாராயணன்) இன்று இந்தியாவினுடைய குடியரசு தலைவராக இருக்கிறார். கேரளாவைச் சார்ந்த ராணி காந்தியை அழைத்து சமரசம் பேசியிருக்கிறார்கள். அப்பொழுது காந்தி சொல்கிறார் என்னிடம் எதுவுமில்லை. இராமசாமி நாயக்கரிடம் பேசி விட்டுச் சொல்லுகிறேன் என்கிறார். பெரியாரைப் பார்த்துப்பேசி பெரியார் ஒப்புக்கொண்டப் பின்னால் ஒரு நிபந்தனை ராணி விதிக்கிறார். அப்போது அரசர் இறந்துவிட்டார். ராணிதான் பேசராங்க. நான் அனுமதி கொடுத்துவிடுவேன். ஆனால் இந்த அனுமதியை வைத்துக்கொண்டு நாளைக்கு கோவிலுக்குள் நுழைகிறேன் என்று யாரும் கேட்கக்கூடாது. தெருவுக்குள் வேண்டுமானால் அனுமதிக்கிறேன் என்று சொல்கிறார் ராணி.

உடனே பெரியாரிடம் காந்தி பேசி இந்த ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அழிக்கிறார். பிறகு மக்களை தயார்படுத்திக்கொண்டு போராட்டத்திற்குச் செல்வோம் அதுவரை காத்திருப்போம் என்று சொல்லிச்சென்றார். காந்தி செய்த அந்த ஒப்பந்தத்தில் தனது கட்டுரையில் ஒரு இடத்தில் கூட பெரியார் பற்றி குறிப்பிட வில்லை. தாழ்த்தப்பட்டவருக்கு என்ன செய்தார். இரட்டை வாக்குரிமை என்று ஒன்றைச் சொன்னார்கள். அந்த தொகுதி யிலிருந்து வரும் M.L.A க்களெல்லாம் அனைவருக்கும் கட்டுப்பட்டிருப்பார்கள் தான் தாழ்த்தப்பட்டவன் என்பதற்காக அந்த பகுதியிலிருந்து வெற்றிபெற்றோம் என்பதற்காக அந்த மக்களிடம் உண்மையாக இருப்பதில்லை. அப்போ இரட்டை வாக்குரிமை என்பதை நம்முடைய இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் ஏற்றுகொண்டார்கள்.

பொதுவான மக்கள் எல்லாம் வாக்களித்து ஒரு சட்ட மன்ற உறுப்பினரை தேர்ந்தெடுப்பார்கள். குறிப்பிட்ட சில தொகுதி களில் மட்டும் தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமே வாக்களித்து ஒரு சட்டமன்ற உறுப்பினரை தேர்ந்தெடுப் பார்கள். அப்படிப்பட்ட மக்கள் கட்டாயம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதால் அவர்கள் தாழ்த்தப் பட்ட மக்களின் மேம்பாட்டிற்கு ஏதாவது செய்தாகவேண்டும் என்பதால் கோரிக்கை வைத்ததை ஏற்றுக்கொண்டு இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அது



அறிவித்தவுடனே காந்தி உண்ணாவிரதம் இருப்பதாய்ச் சொல்லி விட்டார். 8 கோடி தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமையைவிட ஒரு காந்தியின் உயிர் பெரிதல்ல என்று தந்திகொடுத்தார். தாழ்த்தப் பட்ட மக்கள் தாக்கப்படுவதைப் பார்த்து கலங்கிப் போன அம்பேத்கர் கட்டாயத்தின் பேரில் பூனா ஒப்பந்தம் என்பதில் கையயாப்பமிட்டார்.

அதில் கூட பொதுவாக தாழ்த்தப்பட்ட வேட்பாளர்கள் பலபேர் நிற்கமுடியாது. நான்கு பேர்தான் போட்டியிட வேண்டும். முதலில் தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமே வாக்களித்து நிற்கும் நான்கு வேட்பாளர்களை தேர்ந்தெடுப்பார்கள். அவர் ஒரு கட்சிக் காரரோ பல கட்சிக்காரராகவோ இருக்கலாம். அதிக வாக்கைப் பெறும் நான்குபேர் தேர்வு பெற்று அவர்களுக்கு தொகுதிமக்கள் எல்லோரும் பின்னர் ஒருமுறை வாக்களித்து தேர்ந்தெடுப்பார்கள். அப்படித்தான் ஒப்பந்தமிட்டு உண்ணாவிரதத்தை வாபஸ் பெறவைத்தார்கள். அதையும் காங்கிரஸ் ஒழுங்காக செய்ய வில்லை. அதையும் காந்தி ஏன் ஒழுங்காக செய்யவில்லை என்று கேட்கவில்லை. காந்தியும் காங்கிரசும் தாழ்த்தப்பட்டோருக்கு செய்தது என்ன? என்று ஒரு புத்தகத்தை கோபத்துடன் எழுதினார் அம்பேத்கர். அப்புத்தகத்தின் கடைசியில் ஒரு தலைப்புக் கொடுத்தார். "காந்தி இருக்கிறார் ஜாக்கிரதை" என்று சில வீடுகளில் நாய் ஜாக்கிரதை என்று அறிவிப்புப் பலகை இருக்கும் அதற்கு ஒப்பாக அம்பேத்கர் தலைப்பிட்டார்.

பெரியாரிடம் 1927 ல் பேசியதைத் சொன்னார். பெங்களூ ருக்கு பெரியாரை வரவைத்து பெரியார் காங்கிரசை விட்டு வெளியேறிவிட்டார். இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டது. இராஜாஜி தான் பெரியாரை அழைத்துச்சென்றார். இந்து மதத்தில் இருந்துகொண்டே நாமெல்லாம் சீர்திருத்தம் செய்யலாம் என்றார் காந்தி. இப்படி செய்தால் பார்ப்பான் உங்களை விட்டுவைக்க மாட்டான் என்றார் பெரியார். இராஜாஜி கூடவா அப்படி என்று காந்தி கேட்கிறார். உடனே பெரியார் இராஜாஜி திறமையானவர் என்பதை ஒத்துக்கொள்கிறேன். புத்திக் கூர்மையானவர் என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அவர் இனத்திற்கு அதை பயன்படுத்துகிறார். பொதுமக்களுக்கு பயன்படுத்துவதில்லை என்று இராஜாஜியை வைத்துக் கொண்டே சொன்னார். அப்படியா, யாருமே யோக்கியன் இல்லையா, கோபாலகிருஷ்ண கோகலே யோக்கியமில்லையா

என்று கேட்கிறார். மகாத்மாவின் கண்ணிற்கே ஒருவர்தான் தெரிகிறார் என் கண்ணிற்கு என்ன தெரியும் என்று சொல்லி பெரியார் கிளம்புகிறார். அப்போது பெரியார் சொல்கிறார் நீங்கள் இந்து மதத்திற்கு ஜால்ரா போடும்வரை பார்ப்பான் உங்களை விட்டுவைத்திருப்பான். எப்போதாவது நீங்கள் இந்து மதத்திற்கு எதிர்ப்பாக இருப்பது தெரிந்தால் உம்மை ஒழித்துவிடுவான் என்றார் 1927 ல் பெரியார்.

1947 ல் விடுதலை வந்த பின்னால் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் முதலமைச்சராக இருந்தபோது இடஒதுக்கீடு பிரச்சனை வருகிறது. இட ஒதுக்கீடு என்பது தமிழ்நாட்டில் மட்டும்தான் இருந்தது. மராட்டியத்தில் கொஞ்சம் இருந்தது. இட ஒதுக்கீடுக்கு எதிராக பார்ப்பனர்கள் அவ்வப்போதுபிரச்சனை செய்துகொண்டிருந்தார்கள். அப்போது ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் இருந்தபோது இட ஒதுக்கீட்டை கொஞ்சம் அதிகப்படுத்தினார். பிற்படுத்தப்பட்ட மக்களுக் என தனி ஒதுக்கீடு அறிவித்தார். உடனே ஈ.வே. ராமசாமி அவன் தாடியுள்ள ராமசாமி, இவன் ஓமந்தூர் ராமசாமி தாடியில்லா ராமசாமி என்று பார்ப்பனர்கள் சொன்னார்கள். அவர் காங்கிரஸ்காரர், பெரியார் காங்கிரசை எதிர்த்துக்கொண்டிருந்தவர். ஆனால், இவர் தாடியில்லாத ராமசாமி ஓ.பி. ராமசாமி என்று காந்தியிடம் சொன்னார்கள். இடஒதுக்கீடு என்ற திட்டத்தால் எங்களைப் போன்ற பார்ப்பனருக்கு இடம் கிடைக்கவில்லை என்று காந்தியிடம் புகார் கொடுத்தனர். ஓ.பி.ராமசாமி ரெட்டியாரும் போயிருந்தார். ஆமாம் என்று நியாயங்களைச் சொன்னார்.

உடனே காந்தி சொன்னார் ஏய்யா உங்களுக்கு எதற்கு எஞ்சினியர் வேலை ? கட்டிடம் கட்டுகிற வேலை, சூத்திரன் பண்ணவேண்டிய வேலை, பார்ப்பனர்கள் வேதங்கள் படிக்கவேண்டும், வேதம் ஓத வேண்டும் இப்படித்தான் சொல்லுகிறது வேதம் நீங்கள் அந்த வேலையைப் பாருங்களேன் என்று எடுத்துச் சொன்னார். அப்பொழுதே பெரியார் சொன்னார் காந்திக்கு கடைசிக்காலம் நெருங்கிவிட்டது என்று சொன்னார். இதைச் சொன்னவுடனே இப்படிச் சொல்லி விட்டாரா அவனைப் பார்ப்பான் வைத்திருக்கமாட்டான் என்று 1947 ல் சொன்னார். 1948 ல் காந்தி சுடப்பட்டார். ஜனவரி முதலிலேயே காந்தியை சுட்டனர். காரணம் பார்ப்பனர்கள் தான்



காந்தியை மகாத்மாவாக கூறினர். வர்ணாசிரமம் சரி என்று சொன்னவர் காந்தி. தீண்டாமை இருக்கக்கூடாது ஆனால் ஜாதி இருக்கவேண்டும் என்று சொன்னார். அடிப்படை மாற்றங்கள் செய்யவேண்டும் என்று கருதமுடியாத அளவிற்கு கடைசி ஒரு பிற்போக்குவாதியாக மதத்தைக் கொண்டு வந்து அரசியலில் பிரிக்கவேண்டும் என்ற முயற்சிகள் வெளிநாடுகளில் நடந்து கொண்டிருந்தன. மதத்தை அரசியலிலிருந்து பிரிக்கவேண்டும் என்று பல்வேறு முயற்சிகள் வெளிநாடுகளில் நடந்து கொண்டிருக்கின்றன. பெரிய புரட்சியாளர்களெல்லாம் வந்து மதம்வேறு, அரசியல்வேறு பிரிக்கவேண்டும் என்று. முதன் முதலில் பிரஞ்சு நாட்டில் செய்தார்கள். அங்கு லூயிஸ் பெர்ரி என்ற பிரதமர் வந்துதான் மதமும் அரசியலும் வேறு எனப் பிரித்தார். அவரைப்பாராட்டி புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஒரு கவிதை எழுதினார்.

**வறியோர்க்கெல்லாம் கல்வியின் வாடை**
**வரவிடவில்லை, மதகுருக்கள் மேடை**
**நறுக்கத் தொலைந்தது அந்த பீடை**
**நாடெல்லாம் பாய்ந்தது கல்வி நீர் ஓடை**

என்று லூயிஸ் பெர்ரியைப் புகழ்ந்து அவருடைய 200 ஆவது பிறந்த ஆண்டிற்கு பாடல் எழுதினார்.

ஆனால் இங்கு திலகர் மதத்தைக் கொண்டு வந்து அரசியலில் விட்டார். பிளேக் நோய் ஒன்று வந்தது. இதற்கு எலிதான் காரணம் என்று எலிகளை ஒழித்தார்கள். எலிகளை யெல்லாம் கொல்லுனு திட்டம் வகுத்து கொடுத்தான் ஆங்கிலேயன். இதை செய்தது ஒரு ஆங்கிலேயே சுகாதார அதிகாரி. எலிகளை ஒழித்தவுடனே, திலகர் ஒரு பிரச்சாரம் செய்தார். விநாயகனின் வாகனமான மூஞ்சூறுக்களை அழிக்க வேண்டும் என்று வெள்ளையன் சொன்னான். அவனை கொன்றே தீரவேண்டும் என்று சொன்னார். அந்த அதிகாரியை சுட்டே கொன்றுவிட்டார்கள். திலகர்தான் முதன் முதலில் மத அரசியல் கொண்டுவந்தார். அப்புறம் பஜனையெல்லாம் கொண்டு வந்தது காந்தி தான். காங்கிரஸ் மேடையில் அரசியல் விடுதலைப் பேசப் பட்டதில்லை. பஜனை தான் பாடினான். இன்று கூட பார்த்திருப் பீர்கள் தொலைக்காட்சியில் காந்தி நினைவு நாள் அன்று சர்வதேச சங்கத்தில் பஜனை பாடிக்கொண்டுதான் இருந்தார்கள்.

பொதுவாக பஜனை என்றாலே ஏமாற்றுதல் என்று சொல்லு வார்கள். இப்படியா காந்தி நினைவைப் போற்றுவது.

காந்தி நினைவைப் போற்றுவதற்கு ஆயிரம் செய்திகள் இருக்கின்றன. காந்தி எத்தனையோ திட்டங்கள் சொல்லியிருக் கிறார். அது சரியோ தப்போ, அது வேறு, ஆனால், காந்தியை ஏற்றுக்கொண்டிருக்கிற நீங்களாவது செய்யவேண்டும். அதை விட்டுவிட்டு பஜனைப்பாடி மதத்தை உள்ளே கொண்டு வந்தார்கள். கூட முஸ்லீமெல்லாம் வந்த பிறகு அல்லாவை சேர்த்துக்கொண்டு பாட்டுப் பாடினார்கள். காந்தியைப் பொறுத்த வரையில் அரசியலில் புகுத்தியவர், மத நம்பிக்கைகளைக் கொண்டுவந்தார். மத நம்பிகையை அரசியலில் வெளிப்படுத்தி னார். நம்மைப் பொறுத்தவரை மத நம்பிக்கை வேறு மதவாதம் வேறு. காந்தி செய்தது வேறு, பி.ஜே.பி. செய்தது வேறு. மத நம்பிக்கை என்பது நான் நம்புகிற கடவுளை நான் கும்பிட்டுக் கொள்கிறேன் என்பது. மதவாதம் என்பது இப்போது பி.ஜே.பி. பண்ணுவது நான் வணங்குகிற கடவுளைத் தான் அனைவரும் வணங்கவேண்டும் இதைத்தான் பி.ஜே.பி. செய்கிறது. நான் வணங்குகிற கடவுளை நான் வணங்கிக்கொள்கிறேன் அதை வீட்டில் பூஜை அறையில் கும்பிட்டுக்கொள்ளலாம். அதை நாம் விளக்கி ஆகவேண்டும். விவாதத்திற்கு வைக்கவேண்டும். தற்போது விபூதியைப் பற்றி ஒரு செய்தி வந்திருக்கிறது.

ஒரு துண்டறிக்கையைப் பார்த்தேன். கலைஞர் அதைப்பற்றி பேசியிருக்கிறார். அவர் எதிலும் நிலையாக நின்றதில்லை என்றாலும். கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை, கருணாநிதிக்குத் தெரியுமா விபூதி மகிமை என்பது தான் அதன் தலைப்பு. தரம் கெட்டச் சொற்களால் நாங்கள் விவாதம் செய்ய விரும்பவில்லை. அதில் அவர் சொல்கிறார். திருநீறு இடுவதைப் பற்றி உனக்கு பொருள் தெரியுமா? திருநீரு என்ன என்பது முதலில் உனக்குத் தெரியுமா? திருநீறு வந்து நீ தேவாரம் படித்திருந்தால் தெரியும் அதிலிருக்கிறது சாணியிலிருந்து வரவில்லை. சுடலை பொடிதான் திருநீறு. அது சுடுகாட்டில் பிணம் வெந்த சாம்பலை பூசிக்கொள்வது. சுடுகாட்டில் ஆடிக்கொண்டிருந்த சிவன் சாம்பலை பூசிக்கொண்ருந்தான். அதுதான் திருநீறு தவிர சாணியை எரித்து பூசிக்கொள்வதுதான் திருநீறு. நீ தேவாரம் படித்திருக்கிறல்ல சுடலை பொடியை எடுத்து பூசிக்கோ. இந்து



முன்னணிக்காரர்கள் எல்லோரும் போங்க சுடுகாட்டு சாம்பலை எடுத்து பூசி கொள்ளுங்கள் அதுதான் மதத்தை ஒழுங்காக பின்பற்றுவது. பான்ஸ் பவுடர்ல யார்ட்லி பவுடரை வைத்து வருவதல்ல திருநீறு. திருநீரு ஏன் வைத்துக்கொள்கிறாய். ஏதாவது தத்துவம் உங்களுக்கு தெரியுமா, அப்படியே நெற்றியில் பூசிக்கொண்டால் திருநீறு துர்நீரை எல்லாம் இழுத்துறும் அதில் எல்லாம் இழுத்துரும். அதில் எவ்வளவு அறிவியல் இருக்கிறது என்று தெரியுமா? என்கிறார்.

அப்புறம் ஏன் அந்த திருநீரை மேஜைக்கும் வைக்கிற, பீரோவுக்கும் வைக்கிற, நெத்தியிலதான் திருநீரு வைக்கனும். அதுக்கெல்லாம் ஏன் வைக்கணும். அதற்கு விளக்கம் கொடு என்றால் மனிதா கடைசியாக என்னவாய் போவாய் என்று தெரியுமா? அதை நினைவூட்டதான் திருநீறு மனிதா நீ இறுதியில் சாம்பலாகத்தான் ஆகப்போகிறாய் அதற்குள் ஆணவம் கொண்டு திரியாதே என்பதை மனிதன் நினைத்து கொண்டே இருக்க வேண்டும் என்பதற்குத்தான் திருநீறு என்று ஒரு தத்துவ விளக்கம் வேறு. பெரியார் உன் வாதம் சரி என்று வைத்துக்கொண்டால் உணவு கடைசியாக என்ன ஆகிறது. அப்ப சாப்பிடுகிற போதெல்லாம் அதை இலையில் வைத்துக்கொண்டா சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாய் என்று கேட்டார்.

முதலில் பெரியார் இயக்கம் என்பது சாதி ஒழிப்பு இயக்கம், சமுதாய இழிவை துடைக்கும் இயக்கம், சமுதாயத்தில் யார் எங்களை இழிவுபடுத்துகிறார்கள் யார் மக்களை இழிவுபடுத்து கிறார்கள். ஏழு ஆண்டு படித்துவிட்டுவந்தால் யார் வேண்டுமா னாலும் பாதிரியாராகலாம். உரிய படிப்பை படித்தால் யார் வேண்டுமானாலும் முல்லாவாகலாம். நீ இந்த சாதி, இந்த தொழி லென்று அவன் சொல்லுவதில்லை. ஆனால் நீ தான் எந்த படிப்பு படித்தாலும் சரி, உனக்கு எவ்வளவு அறிவிருந்தாலும் சரி, எல்லா வற்றையும் தெரிந்த கிருபானந்தவாரியராக இருந்தாலும் சரி, குன்றக்குடி அடிகளார், அவர்களைப் போல மதக்கல்வியைப் படித்திருந்தாலும் சரி நீ பார்ப்பனத்திக்கு பிறக்கவில்லை யென்றால் உனக்கு அர்ச்சகனாக தகுதியில்லை என்று வைத்திருக் கிறாய். நாங்கள் கேட்கிறோம். நீ சொல்லு இதைப்படித்தால், திருநீறு வைத்திருந்தால், நான்கு வேதங்கள், உப நிசத்துக்கள் தெரிந்திருந்தால் கூட அர்ச்சகனாக முடியாது.

நேற்று எங்களுடைய பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனுக்கும், இந்து முன்னணி அமைப்பாளர் இராம. கோபாலனுக்கும் விஜய் டி.வி.யில் விவாதம் நடந்தது மத அடையாளம் அணிந்து கொள்வது சரியா? தவறா? என்பது தான். அது இந்துக்களே ஒன்று சேருங்கள் என்று சொல்கிறீர்களே அதற்கு ஏன் அனைத்து சாதியினரும் அர்ச்சகராக ஒப்புகொள்ள மறுக்கிறீர்கள் என்றார் விடுதலை இராசேந்திரன், இல்லையே என்றார் இராம. கோபாலன். நீங்கள் அறிப்பு கொடுங்கள். இந்த மேடை வழியாக, இந்த தொலைக்காட்சி வழியாக எந்த சாதியைச் சார்ந்த எவராக இருந்தாலும் இனி அர்ச்சகராகலாம் என்று சொல்ல முடியுமா என்றார் இராசேந்திரன். நீங்கள் கடவுள் உண்டு என்று சொன்னால் உடனே அறிவிப்பு கொடுக்கிறேன் என்றார். எங்களுக்கு கடவுளில்லை. ஆனால் கடவுள் உண்டு என்று சொல்பவர்களுக்கு இந்த உரிமை கிடைக்குமா என்றார் இராசேந்திரன். நாங்கள் ஒப்புக்கொள்கிறோம் என்று நெஞ்சார பொய் சொன்னார் இராம. கோபாலன் நாங்கள் சொல்லுவது இதுபோல் இழிவுபடுத்துவது ஒரு காரணம்

இரண்டாவது காரணம் இந்தியாவில் பெரும்பாலாக எது இருக்கிறதோ அதைப் பற்றிதான் நான் பேசவேண்டும். என்னை மற்ற மதத்தவர் இழிவுபடுத்துவது என்பது வேறு, யார் அந்நியன் என்று கட்டுரை எழுதினார் பெரியார் என்னோடு கைக் குலுக்கிறான், என்னை பிரதர் என்கிறான். நான் சமைத்த உணவை சாப்பிடுகிறான். என்னை சமையலுக்கு வைத்துக் கொண்டிருக் கிறான். அவன் அந்நியனா? என்னை தொடாதே, தூர நில், தொட்டால் தீட்டு தலையோடு முழுகவேண்டும். மலம்பட்டால் அந்த இடத்தை மட்டும் கழுவுவேன். மனிதனாகிய நீ தொட்டால் உடம்பு முழுவதும் கழுவுவேன் என்று சொல்கிற இவன் அந்நியனா? என்று பெரியார் எழுதினார். யார் எனக்கு அந்நியன் ஆங்கிலேயனா? பார்ப்பானா? இந்தியாவில் பெரும்பான்மை மக்களாக இருக்கிற மக்களுடைய மதம் இந்து மதம், அப்ப பெரும்பான்மையான செய்தியைத்தான் பார்க்கமுடியும்.

இங்கர்சால் பேசினார் அமெரிக்காவில் அங்கே இந்து மதத்தைப் பற்றி அவர் பேசவில்லை. ஏன் பேசவில்லை என்று அங்கு இருக்கிற எந்த கிறிஸ்துவனும் கேட்கவில்லை. காரணம் பெரும்பான்மை மக்களின் மதமாக இருப்பது அங்கு கிறிஸ்துவ



மதம் தான். அவர் கிறிஸ்தவமதத்தைப்பற்றி அங்கே எதிர்த்துக் பேசினார். அவர் அப்படித்தான் பேசமுடியும். அந்தந்த நாட்டில் இருக்கிறவர்கள் அதாவது வங்காளதேசத்து பெண் கவிஞர் தஸ்லிமா நஸ்ரீனுக்கு மரணதண்டனை கொடுத்ததால் மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவர் அங்குள்ள பெரும்பான்மை மதமான முஸ்லீம் மதத்தை பற்றித்தான் பேசமுடியும் எனவே அவருக்கு வங்காள தேசத்திலே மரண தண்டனை கொடுத்தார்கள். அதேபோல இந்நாட்டில் இந்து மதம்தான் பெரும்பான்மையான மதம் எனவே அதைப்பற்றித்தான் பேசமுடியும். கடவுள் இல்லை என்று சொன்ன பெரியார் கடவுளை கற்பித்தவன் முட்டாள், கடவுளை பரப்பியவன் அயோக்கியன், கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி என்று சொன்ன பெரியார் இதில் அடைப்புகுறிக்குள் கிறிஸ்துவ கடவுளைத் தவிர, முஸ்லிம் கடவுளைத் தவிர என்றெல்லாம் சொல்லவில்லை எல்லாக் கடவுளையும் தான் இல்லை என்று சொன்னார்.

ஆனால் பெரியார் கடவுள் மறுப்பை மட்டும் சொல்ல வில்லை. அது அவருடைய இலட்சியமும் அல்ல பெரியார் இலட்சியம் ஜாதி ஒழிப்பு கையில் எடுத்துக்கொண்ட கருவிகளில் ஒன்று கடவுள் மறுப்பு. கடவுள் என்பது மனிதன் முன்னேற்றத் திற்கு, சாதி ஒழிப்பிற்கு தடையாகும். ஒன்று பட்ட இந்தியா பிரிந்து போகட்டும் என்று சொன்னார். பெரியார் ஒன்றுபட்ட இந்தியாவில் நமக்கு சம உரிமை கிடைத்திருக்கும் என்றால் அதைப் பற்றி பேசியிருக்க மாட்டார், பெரியார் இலக்கு சமுதாய புரட்சி, சாதி ஒழிப்பு, அதற்கு எது எது வேண்டுமோ அதை யெல்லாம் கையில் எடுத்தார். இங்கு இந்து மதம் தடையாக இருந்தது. எனவே அதைப்பற்றி விமர்சனம் செய்தார்.

அதைப்பற்றி ஏன் சொல்ல வந்தேன் என்றால் நாங்கள் நியாமான விவாதங்களை கேவலமான சொற்களால் சொல்ல விரும்பவில்லை. இதை நீங்கள் கேட்டுக்கொண்டு அடுத்த கூட்டத்தில் சொல்லுங்கள் அல்லது துண்டறிகை போடுங்கள். நாங்கள் மீண்டும் கூட்டம் போட்டு துண்டறிக்கை அடித்து உங்களுக்கு பதில் சொல்ல தயாராக இருக்கிறோம். என்பதைச் சொல்லித்தான் இந்த வாதங்களை வைக்கிறோம். காந்திக் கொலையைப் பற்றி சொல்லுகிற பொழுது கோட்சே ஆர்.எஸ்.எஸ்.காரன் இல்லை என்பது ஒரு வாதம். அதற்கு நாங்கள்

பதில் சொல்வதைவிட அந்த கொலை வழக்கிலே கோபால் கோட்சேவும் கைது செய்யப்படுகிறார். விநாயம் நாதுராம் கோட்சேதான் காந்தியை சுட்டவர். கொலையாளிக்கு துணையாக இருந்தார் என்று அவருடைய தம்பி கோபால் கோட்சேயும் கைது செய்யப்பட்டார். வழக்கு நடந்தது. இருவருக்கும் தூக்கு தண்டனையும் மற்றவர்களுக்கு ஆயுள் தண்டனையும் வழங்கினார்கள். தண்டனை காலத்துக்குப் பிறகு விடுதலைப் பெற்று வந்தனர். வந்த பிறகு ஒரு புத்தகம் எழுதினார். "நான் ஏன் காந்தியை கொன்றேன்'' என்பது அந்த புத்தகத்தின் பெயர். கோட்சேவினுடைய தம்பி விடுதலையான பிறகு எழுதிய புத்தகம் தான் இது. அந்த புத்தகத்தில் அவர் சொல்லுகிறார் நாதுராம் கோட்சேயும் நானும் ஆர்.எஸ்.எஸ். காரர்கள்தான். அத்வானி இதை மறுப்பது அவரது கோழைத்தனத்தை காட்டுகிறது என்று சொல்கிறார் . இன்னொரு ஆதாரம் என்னவென்றால் 1912 ஆம் ஆண்டு கோட்சே பிறக்கிறார். 1932 ஆம் ஆண்டு ஆர்.எஸ்.எஸ்.ல் பிரச்சாரக்கராக இருக்கிறார். 1938 ல் ஐதராபாத் நிஜாமை எதிர்த்து (இசுலாமியர் என்பதற்காக) போராட்டம் நடத்துகிறார். இதை ஆர்.எஸ்.எஸ். தான் முன்னின்று நடத்துகிறது. அதில் கைதாகி ஐதராபாத் சிறையில் 20 மாத சிறைதண்டனை பெறுகிறார் நாதுராம் கோட்சே. 20 மாதம் சிறையில் இருக்கிறார் அப்போது அவர் தான் சிறையிலிருந்தவர்களுக்கு ஆர்.எஸ்.எஸ். பயிற்சி வகுப்புகளை எடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதை அந்த கொலை வழக்கில் அவருடைய வாக்கு மூலத்தில் சொல்லி யிருக்கிறார். அப்போது அந்த கொலை வழக்கில் சொல்லி யிருக்கிறார். அப்போது அந்த கொலை வழக்கில் தேஷ்பாண்டே என்பவரும் சிறைபட்டு வருகிறார்.

அவர் யாரென்றால் இந்து மகா சபையின் பொது செயலாளர் அவரும் ஐதராபாத் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்டவர். அவர் என்ன சொல்கிறார் என்றால் நீ ஆர்.எஸ்.எஸ். ல் இருந்தாய் நீ அரைகுறையாய் இருந்து விட்டு திருப்பி இப்ப வந்து பன்னுணா எப்படி? இன்னொரு தடவை ஆர்.எஸ்.எஸ். காரன் என்று உறுதி மொழி எடுத்துக்கொள்ள வேண்டும். என்று சொல்கிறார். அப்போது எல்லோரையும் அமர வைத்து மீண்டும் ஆர்.எஸ்.எஸ். காரனென்று கோட்சே புதுப்பித்துக் கொண்ட பின்னால் தான் பயிற்சிக்கே அவரை அனுமதிக்கிறார்கள் இதை யார் சொல்லுகிறார்கள் என்றால்



நீதிபதி எஸ்.வி. மோகன் என்பவரைப்பற்றித் தெரியும் நம் உயர்நிதிமன்ற நீதிபதியாக இருந்தவர், கருநாடக உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாக இருந்தவர், உச்ச நீதிமன்ற த்தில் நீதிபதியாக இருந்தவர் அவர் "தியாக தீபம்'' என்று ஒரு புத்தகம் எழுதியுள்ளார். அதில் காந்தியினுடைய கொலை வழக்கைப் பற்றி எல்லா தகவல்களையும் திரட்டி, எல்லோருடைய வாக்குமூலங்களையும் ஒன்று சேகரித்து ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். "தியாக தீபம்'' ன்னு ஸ்ரீராம் டிரஸ்ட் வெளியிட்டிருக்கிறது. சென்னை 145 லிங்கு செட்டி தெரு விலிருந்து இதை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த புத்தகத்தில் தான் இந்த செய்தியயல்லாம் எழுதியுள்ளார்.

யார் எழுதுகிறார் என்றால் நீதிபதி மோகன் எழுதுகிறார் என்னவென்றால் அவர் ஆர்.எஸ்.எஸ். காரர் என்பதால். மாணவ பருவத்தில் பம்பாய் கவர்னர் சர். எர்னால்ட் ஃபோல்ஸ்டன் சுட்டு எட்டு ஆண்டு சிறைபெற்ற வி.பி. நாப்தே, நாராயண ஆப்தே இவர்களெல்லாம் பின்பு இந்து ராஸ்டிராதள்ன்னு இவர்களெல்லாம் ஆர்.எஸ்.எஸ். சரியில்லை இவர்கள் வேகம் போதவில்லை என்று மற்றொரு அமைப்பு தொடங்குகிறார்கள். ஆனாலும் கூட அவர் எப்போதும் தன்னை ஆர்.எஸ்.எஸ். காரர் என்று கருதிக்கொள்ள மற்றொரு காரணம் என்னவென்றால் இவர் புனாவிலிருந்து காந்தியை கொலை செய்ய செல்கிறார் இவர்களுடைய யோக்கியதையயல்லாம் கேட்டால் வேடிக்கை யாக இருக்கும், காந்தியை கொலை செய்ய போவதற்கு முன்னால் இவர்களெல்லாம் யோசனை செய்கிறார்கள். காந்தி வந்து பல செய்திகள் சர். ஆர்.கே. சண்முகசெட்டியாரைப் பற்றி சொன்னேன் விடுதலைபெற்ற பிறகு இந்தியாவிற்கும், பாக்கிஸ்தானுக்கும் கணக்கு தீர்த்துவிட்டு வருகிறார் இந்தியா, பாக்கிஸ்தானுக்கு 55 கோடி ரூபாய் தரவேண்டும் என்று கணக்கு தீர்கிறது. இதனை பட்டேல் தர முடியாது என்று சொல்கிறார்.

ஆரம்பத்தில் ஒத்துக்கொண்ட பட்டேல் இப்பொழுது தரமுடியாது என்று அறிவிக்கிறார். 12 ஆம் தேதி காலையில் பத்திரிகையில் வருகிறது. மாலை வழக்கம் போல் காந்தி உண்ணாவிரதம் ஆரம்பிக்கிறார். அது 15 வது உண்ணாவிரதம். சாகும் வரை என்று சொன்ன 15 வது உண்ணா விரதம். இது மட்டும் காரணம் இல்லை அப்பொழுது சொல்கிறார் 1176

மசூதிகள் கோவில்கள் ஆக்கப்பட்டுள்ளன. அதில் காந்தி அறிக்கையில் சொல்கிறார் உண்ணாவிரம் இருந்ததற்கான காரணம் ஒப்புக்கொண்ட 55 கோடியை பாக்கிஸ்தானுக்கு தர வேண்டும்.1176 மசூதிகள் கோவில்கள் ஆக்கப்பட்டுள்ளன. அவை மீண்டும் மசூதிகள் ஆக்கப்படவண்டும் என்று சொல்லி 12-01-48ல் உண்ணாவிரதத்தை தொடங்குகிறார் காந்தி. அதற்கு முன்னாடியோ காந்தியை கொலை செய்யவேண்டும். என திட்டம் போட்டிருந்தனர். கொலை செய்ய போகிற கோபால கோட்சே உடனே திட்டம் போடுகிறான் என்னடா கொலை செய்யப் போகிறோமே அங்கு போய் நமக்கு ஏதாவது ஆகிவிட்டால் நமது குடும்பம் என்ன ஆவது என்று யோசிக்கிறான்.

13 ஆம் தேதியே போய் கோபால் கோட்சே என்ன செய்கிறான் என்றால் நாராயண ஆப்தே தூக்கு தண்டனை பெற்றான் பாருங்க ஆனால் நாதுராம் கோட்சே திருமணம் ஆனவன் அல்ல. நாராயண ஆப்தே தன் மனைவி சம்பூதி என்ற (Internation Assurence Company Limited) பேரில் 2000 ரூபாய்க்கு இன்சூரன்ஸ் பாலிசி எடுக்கிறான். ஏனென்றால் நாம் இறந்தால் கூட அவர்கள் பிழைத்துக் கொள்வார்கள் என்பதால் 14 ஆம் தேதி கோபால கோட்சே போய் அவன் மனைவி சிந்துபாத்தை நாமினி யாக வைத்து 3000 ரூபாய்க்கு பாலிசி எடுத்துக்கொள்கிறான். அவன் 13ஆம்தேதி, இவன் 14 ஆம்தேதி, காந்தி 12 ஆம் தேதி உண்ணாவிரதம் இருந்த உடனே முடிவுசெய்துவிட்டார்கள் முடித்துவிடவேண்டும் காந்தியை என்று. இவங்க இப்ப இடித்தது ஒரு மசூதியை மட்டுமல்ல, 1176 மசூதிகள் இடிக்கப்பட்டிருப்பதாக காந்தி தன்னுடைய அறிக்கையில் சொல்கிறார். அதை நீதிபதி மோகன் அவர்கள் அந்த வழக்கிலிருந்து எடுத்துக் சொல்லி யிருக்கிறார். அதை கோவில்கள் ஆக்கப்பட வேண்டும் என்று திரும்பவும் சொல்கிறார். அவன்கோட்சே புறப்பட்ட போது தன் கையில் கீதை ஒன்றை எடுத்துக்கொண்டான். அகண்ட விசால இந்து சாம்ராஜ்ஜியம் இருக்கிறதல்லவா அவர் சொன்னாரே பர்மா, ஆப்கானிஷ்தான், பாகிஸ்தான் எல்லாம் சேர்ந்து அந்த படத்தை ஒன்று கையில எடுத்துக்கொள்கிறான் இன்னொன்று ஆர்.எஸ்.எஸ். கொடி இவை மூன்றையும் எடுத்துக்கொண்டு தான் பயனத்தை தொடங்கினான் என்று கோபால் கோட்சே தன்னுடைய வாக்குமூலத்தில் சொல்கிறான். புனாவில் இருந்து கொலைசெய்ய



புறப்படும் முன் ஆர்.எஸ்.எஸ்.கொடி, கீதை, அகன்ற இந்து சாம்ராஜ்ஜியத்தின் படம் இவை மூன்றையும் கையில் எடுத்துக் கொண்டு போகிறன் இவனை என்னவென்று சொல்லிகிறீர்கள். இவன் ஆர்.எஸ்.எஸ். காரன் இல்லை என்று சொல்கிறார்களா அவர்கள்.

அதுமட்டுமல்ல 1947ல் விடுதலை பெற்ற அன்று விடுதலையை பலபேர் ஏற்றுக் கொள்ளவில்லை. பல காரணங் களுக்காக திராவிடர் கழகம் பெரியார் ஏற்றுக்கொள்ளவில்லை. பெரியார் விடுதலையை விடுதலை என்று ஒப்புக்கொள்ளவில்லை. இது விடுதலையா என்தே ஒரு கேள்விக் குறிய ஒன்று. காரணம் 1947 ஆகஸ்ட் 15 அன்று விடுதலை ஒன்றும் கொடுத்துவிடவில்லை. இந்தியா சுதந்திர நாடாகிவிடவில்லை. இந்தியாவுக்கு கவர்னர் ஜெனரல் யார்? மவுண்ட் பேட்டன் தான் இருந்தார். இந்தியாவிற்கு குடியரசு தலைவர் என்று யாரும் இல்லை. இந்திரா அரசு தான் அதற்கு தலைவராக இருந்தார், இங்கிலாந்தில் அரசுக்குத் தான் தலைமைப் பதவி இருந்ததே தவிர, ஜனாதிபதிக்கு இல்லை. கவர்னர் ஜெனரல் இருந்தார். இந்தியாவினுடைய முப்படைக்கும் யார் தளபதியாக இருந்தார்கள். பிரிட்டிஸ்காரன் தொடர்ந்து தான் இருந்தார்கள். நம்முடைய மாநிலங்களில் ஐந்து மாநிலங் களுக்கு ஆங்கிலேயர்கள் கவர்னர்களாக இருந்தார்கள். அவர்கள் அப்படியே தொடர்ந்தார்கள். அதற்கு எப்படி விடுதலை என்றுபெயராகும்.

அதற்குப் பெயர் குடியேற்ற நாடு என்று ஒரு அந்தஸ்தை கொடுத்தார். நீயே ஆட்சி செய்து கொள் ஆனால் மேலே பார்ப்பதெல்லாம் எங்களுடைய வேலை. அதை டோமினியன் அந்தஸ்து என்று சொல்வார்கள். இப்போது அந்த வார்த்தை யையே எடுத்துவிட்டார்கள். 1947 ல் டொமினியன் அந்தஸ்து என்ற ஒன்றை மட்டும் கொடுத்தார். ஆனால் அது விடுதலை கிடையாது. 1950 ல் தான் நம்மை நாமே ஆண்டுகொள்ளும் சட்டங்களை ஏற்படுத்திக்கொண்டு நாம் குடியரசானோம் அதற்கு முன் அவன் தான் நமக்கு அரசானாக இருந்தான். அவன்தான் படைத்தலைவனாக இருந்தான். அவன்தான் கவர்னராகவும் இருந்தான். அது ஒரு பக்கம் இருக்கட்டும் இதை பெரியார் ஏற்றுக் கொள்ளவில்லை. என்ன சொன்னார் என்றால் வெள்ளைக் காரனிடமிருந்து பார்ப்பன கொள்ளைக்காரனுக்கு அதிகார

மாற்றம் நடைபெறுகிறது என்று பெரியார் சொன்னார். 6000 ம் மைலுக்கு அப்பால் இருக்கிற ஆங்கிலேயேனா நம்மை ஆள்வது என்று சொல்லிக் கொண்டிருந்தோம். இப்பொழுது ஈராயிரம் மைலுக்கு அப்பால் இருக்கிற ஆரியனா நம்மை ஆள்வது என்று சொல்லப் போகிறோம்.

கொஞ்சம் மையில் குறைந்திருக்கிறதே தவிர அந்நியன் தான் நம்மை ஆள்கிறான். நாம் அப்பொழுது கேட்டோம் உனக்கும், எனக்கும் என்ன சம்மந்தம் உன் மொழி வேறு, என் மொழி வேறு, உன் மதம் வேறு, என் மதம் வேறு, உன் நடை உடைவேறு, என் நடை உடை வேறு என்று ஆங்கிலேயன்னை சொன்னோம். அந்தக் கேள்வி இன்னும் அப்படியேத்தான் இருக்கிறது. வடக்கத்திய ஆளுக்கும், நமக்கும் அந்த வேறுபாடு அப்படியே தான் இருக்கிறது. எனவே இது பாண்டெல்லாம் மேடவர் எழுதி தருவாங்க தெரியுங்களா. இவன் கேஸ் போடனுன்னா மேடேவர் எழுதுதி தருவார்கள். ஆங்கிலேயன் இவனுக்கு மேடோர் எழுதிகொடுத்துவிட்டு போனான் என்று பெரியார் சொன்னார்.

இந்த பார்வைக்கும் ஆர்.எஸ்.எஸ். பார்வைக்கும் வேறுபாடு உண்டு. ஆர்.எஸ்.எஸ். என்ன கருதியது என்றால் இந்த விடுதலை என்பது விடுதலை அல்ல. எது விடுதலை என்றால் இந்த நாட்டில் அனைவரும் இராமனை அவன் கோல்வாக்கர் எழுதினான் “பஞ்சாப் தாட்ஸ்'' என்ற புத்தகம் எழுதியிருக்கிறார். “சிந்தனைக் கொத்து'' என்று அந்த புத்தகம். அதில் அவன் சொல்கிறான் இந்த நாட்டில் இசுலாமியர்கள் இருக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை, கிறிஸ்துவர்கள் இருக்க கூடாது என்று சொல்ல வில்லை. இருக்கலாம் ஆனால் இராமனை வணங்கிக்கொண்டு அவர்கள் இருக்கலாம் எப்படி இருப்பார்கள் கிறிஸ்துவர்களும் முஸ்லீம்களும் இராமனை வணங்கிக் கொண்டு இருக்காலாமா இருக்கக்கூடாது என்று அவர்கள் சொல்லவில்லையாம். அப்படித்தான் இவர்கள் கருதினார்கள். அப்படித்தான் இங்கு இராமராஜ்யம் அமைய வேண்டும் என்று கருதினார்கள். பெரியார் இராமராஜ்யம் என்றால் உனக்கு என்வென்று தெரியுமா காந்தி இராமாயணத்தை ஒழுங்காகப்படி என்று கூறினார் பெரியார்.

சும்மா பஜனை செய்தால் போதாது என்று காந்தியைப் பார்த்து கூறினார். இராமன் என்ன செய்தான் ? பார்ப்பனர் அல்லாத சம்பூகன், ஒரு மலைவாழ் ஆதிவாசியான ஒரு சம்பூகன்



அவன் தவம் செய்கிறான் கடவுளை கும்பிடுகிறான். எனக்கு இதையயல்லாம் செய்யயன்று குடுபிடுகிறான். பார்ப்பனர்களை பொறுத்தவரை, இந்து மதத்தை பொறுத்தவரை Through proper channel எந்த Application-ம் போகவேண்டும். நம்ம ஆள் இங்கிருந்து நம்ம கிளார்க், கலெக்டருக்கு நேராக பெட்டிசன் கொடுத்தால் தாசில்தாருக்கு கோபம் வந்துவிடும் Through proper channel எழுதவில்லையா என்றுdiciplinary Action (ஒழுங்கு நடவடிக்கை) எடுப்பார். எப்படியா நீ எழுதினாய் எம்மூலம் தானே நீ போக வேண்டும். இதை போல நம்மவர்கள் கடவுளை கும்பிடவேண்டும் என்றால் பார்ப்பான் வழியாகத்தான் கும்பிட வேண்டும். நாம் இவரிடம் கூறவேண்டும். என் மகளுக்கு கல்யாணம் ஆகவில்லை என்றால் இவர் சமஸ்கிருதத்தில் கடவுளிடம் கூறவார். ஆனால் நேராக கும்பிடுவது குற்றமென்று வைத்திருந்தான்.

இந்து மதத்தில் அதை சம்பூகன் செய்தான் நேராக கடவுளை பார்த்து வணங்கினான் அப்போது ஒரு பார்ப்பன குழந்தை இறந்துவிட்டது. அதை தூக்கிக் கொண்டுபோய் இராமா உன் ஆட்சியில் அதர்மம் நடந்துவிட்டது என்று சொன்னான். என்னடா அதர்மம் நடந்துவிட்டது என்றால் பார்ப்பன குழந்தை இறந்துவிட்டது என்றான். அந்த குழந்தை சாவரதுதான். இல்லை காரணம் நம்முடைய தர்மம். இந்து தர்மம் மீறப்படுகிறது. ஒரு சம்பூகன் என்பவன் நேரடியாக தவம் செய்து கொண்டிருக்கிறான். கடவுளை வணங்கிக்கொண்டிருகிறான். கடவுளை வணங்கிக் கொண்டிருக்கிறான் அப்படியா எந்நாட்டில் மதம் குலைந்து விட்டதா? என் வலது கையே அவனை துண்டித்துவிடு, உடனே அவனை துண்டிக்கிறார். அவனை வெட்டிய உடனே அந்த பையன் எழுந்து உட்கார்ந்து கொள்கிறான். ராமாயணத்தில் இந்த செய்தி வருகிறது. இராமராஜியம் என்பது என்ன வென்றால் யாரும் பார்ப்பனர் இல்லாமல் நேரடியாக கடவுளைக் கும்பிட அனுமதிக்கப்படமாட்டார்கள் அதுதான் இராமராஜியம். இது வரவேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். கருதியது. அது வருகிற வரை இந்தியாவிற்கு சுதந்திரம் இல்லையயன்று கருதினார்கள். 1947 ஆகஸ்ட் 15 யை பெரியார் துக்க நாள் என்று சொன்னதை போல ஆர்.எஸ்.எஸ். அதை ஏற்றது. அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என சொன்னார்கள். அன்று எல்லா பக்கமும் நாட்டுக்கொடியை ஏற்றியதற்கு பதிலாக சுவஸ்திக் சின்னம் போட்ட கொடியை

ஏற்றினார்கள். அப்படியேற்றியவர்களில் நாதுராம் கோட்சே ஒருவர் என்பதை அந்த வழக்கில் பதிவு செய்திருக்கிறார்கள்.

நீதிபதி மோகன் அதையும் எழுதுகிறார். இவரும் ஆர்.எஸ்.எஸ். கொடியை உயர்த்தி வைத்ததில் ஒருவர் நாதுராம் கோட்சே இவரும் கொடியை உயர்த்தி வைக்கிறார். அது மட்டுமில்லை சாகியபோதும் கூட என்ன சொல்கிறார் என்றால் அவருக்கு 1948ல் கொலை நடக்கிறது. 30-01-1948 ல் இது நடக்கிறது. அதற்கு தீர்ப்பு ஜூன் மாதம் வந்து விடுகிறது. இவர்கள் மேல் முறையீடு செய்கிறார்கள். அது நவம்பரில் மேல் முறையீடு தள்ளுபடி ஆகிறது. 1940 ல் நவம்பரில் தூக்கு தண்டனை உறுதியாகிறது. நவம்பர் 15 ஆம் தேதி தூக்கில் இட்டார்கள் கோட்சேவை இறுதி ஆசை என்ன என்று கேட்டார்கள். அதற்கு கோட்சே என்னுடைய உடலை எரித்த சாம்பலை எந்த நதியிலும் கரைக்கக்கூடாது என்று சொல்கிறான். காந்தியின் அஸ்தி கரைக்கப்பட்டது, நேருவின் அஸ்தி கரைக்கப் பட்டது என்று சொல்வார்கள். தலைவர் இருந்த காலத்தில் சொல்வதையும், இறந்த காலத்தில் சொல்வதையும் யாரும் கேட்ப தில்லை. நேரு தன்னுடைய உயிலில் நேரு உயில் என்ற புத்தகத்தில் எழுதி வைத்தார். நான் மத நம்பிக்கை இல்லாதவன். நான் கடவுள் நம்பிக்கை இல்லாதவன். என்னுடைய சாம்பல் எந்த நதியிலும் மத நம்பிக்கை அடிப்படையில் கரைக்கப்படுவதை நான் விரும்பவில்லை. விமானத்தில் சென்று நான் எந்த மக்களுக்காக வாழ்நாள் முழுவதும் உழைத்தேனோ அந்த இந்திய மண் முழுவதும் பரவுமாறு விமானத்தில் சென்று என் சாம்பலை தூவிவிடுங்கள் என்று எழுதினார். ஆனால் பூணூல் போட்டுக் கொண்டு போய் இதை நதிகளில் கரைத்துவிட்டார்கள். அப்பா விற்கு அலகாபாத்தில் பூணூல் போட்டு பண்ணினாரு மத நம்பிக்கை இல்லாதவர் என்று சொல்லிக்கொண்டு இவர் வந்தப் பின்னால் அவருடையது கரைத்துவிட்டார்கள்.

ஆனால் கோட்சே என்னுடைய அஸ்தியை கரைத்து விடாதிர்கள், என்னுடைய அஸ்தியை அப்படியே வைத்திருந்து அகன்ற இந்து சாம்ராஜ்யம் ஆர்.எஸ்.எஸ். ன் கனவான அகண்ட விசால பாரதம் அமைத்தப் பின்னால் சிந்து நதியில் போய் கரைத்துவிடுங்கள் என்று சொன்னார். அது இப்பொழுது பாக்கிஸ்தானில் உள்ளது. அவனுடைய ஆசை என்னவென்றால் சிந்து நதியில் கொண்டு போய் கரைத்துவிடுங்கள் என்று சொன்னான். இன்று வரை அந்த நாதுராம் கோட்சேவினுடைய



சாம்பல் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நவம்பர் 15 ஆம் தேதி ஆர்.எஸ்.எஸ். காரர்கள் கூடி அதற்கு வணக்கம் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் கரைக்கப்படவில்லை.

ஆக ஆர்.எஸ்.எஸ். காரர்கள் தங்கள் இந்து மத நோக்கங் களுக்கு எதிராக காந்தி போய் கொண்டிருக்கிறார் என்று தெரிந்தவுடனே கொலை செய்ய திட்டமிடுகிறார்கள். கொலை செய்கிறார்கள் அப்போது கொலை செய்தவுடனே அவர் சொன்னதைப் போல பல முன்னேற்பாடுகளை செய்து கொண்டு தான் போகிறார். ஒரு மாதத்திற்கு முன்னால் இஸ்மாயில் என்று பச்சைக் குத்திக்கொண்டார், சுன்னத் செய்துகொண்டார் ஏனென்றால் ஒரு வேளை இறந்துபோய்விட்டாலும் கூட என் உடலைப் பார்ப்பவர்கள் ஒரு இசுலாமியன் சுட்டுக்கொன்றான் என கருதிக்கொள்ள வேண்டுமென்ற தீய நோக்கத்தோடு செய்வதென்றால் நான் ஒன்று செய்வேன் என்றால் கொள்கை அடிப்படையில் ஒரு முடிவை செய்துவிட்டால் நேரடியாக கொலை செய்யவேண்டும், ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆமா நான்தான் செய்தேன். பகத்சிங் குண்டை வீசினார் ஓடியிருக்கலாம். அங்கே நின்றுகொண்டிருந்தான். ஒரே குழப்பம் தான் ஓட வில்லை. நான்தான் வீசினேன். இன்னகாரணத்திற்காக வீசினேன் என்று நீதிமன்றத்தில் பதிவு செய்தார். வீரன் அவன்.

இவன் செய்ய வேண்டும் இந்து ராஜ்ஜியத்திற்கு தடையாக இருக்கிற காந்தியை கொல்லவேண்டும். ஆனால், இசுலாமியன் கொன்றதாக கருதிக் கொள்ள வேண்டும். அப்பொழுது இசுமாயில் என்ற பச்சைக் குத்திக்கொண்டு சுன்னத் செய்துகொண்டு இவன் போய் கொலை செய்வான். ஒரு வேளை கொலை செய்யப்பட்ட இவன் உயிரோடு பிடித்ததால் பரவாயில்லை. இறந்துபோயிருந்தால் ஒட்டுமொத்த இந்திய மக்கள் ஒரு இசுலாமியன் கொன்றுவிட்டதாக கருது வார்கள். இவன் செத்துப்போனாலும் கூட அந்த கோபத்தை இசுலா மியர்கள் மீது திருப்பிவிட வேண்டும் என்ற உள்நோக்கம் அவர் களுக்கு இருந்திருக்கிறது. நான் இதற்காக செய்யவில்லை. ஆனால், நீதிமன்றத்தில் பெரிய வீரமாக சொன்னான். இந்த ஆள் தன்னுடைய வாக்குமூலத்தைக் கூட வாயில் சொல்லிவிட வில்லை. கோட்சே எழுத்து மூலமாகத்தான் கொடுத்தார் அதில் சொல்கிறார். கீதையில் கண்ணன் சொல்லியிருக்கிறான். இந்து தர்மம் கெடுகிறபோது அதற்காக கொலை செய்வதும் குற்ற

மில்லை என்று கீதையில் கிருஷ்ணன் சொல்லியிருக்கிறார். அதைத்தான் நான் செய்தேன் என்று எழுதிக்கொடுத்திருக்கிறான். அதற்காகத் தான் கீதையை கையில் எடுத்துப்போயிருக்கிறான்.

எதற்காக நாதுராம் கையயழுத்துப் போடவில்லை என்பதற்கு காரணம் என்னவென்றால் கீதையில கிருஷ்ணன் சொல்லி யிருக்கிறான். தர்மம் என்றால் வேறு ஒன்றுமில்லை. இந்துதர்மத்தைக் காப்பாற்றுவது தான் தர்மம் என்று சொல்வ தெல்லாம். வருணாசிரம தர்மத்தை இந்து தர்மத்தைச் சொல்லுகிறான். அதை காப்பாற்று வதற்காக கொலை செய்வது கூட குற்றமில்லை. என்று கிருஷ்ணன் சொல்லியிருக்கிறார். பகவத் கீதையில் என்று சொல்லி தன்னுடைய எழுத்துவடிவிலான வாக்கு மூலத்தில் அதைத்தான் நான் செய்தேன் என்று ஒத்துக்கொண்டான். நாதுராம் கோட்சே ஒத்துக்கொண்டான். ஆனால், இவ்வளவு வீரமாக சிக்கியப் பின்னால் ஒத்துக் கொள்வார்கள். சிக்குவதற்கு முன்னால் சதித்திட்டம் தீட்டுவார்கள். இசுமாயில் என்று பச்சைக் குத்திக்கொண்டு இந்த கோபத்தை திருப்பிவிட நினைகிறார்கள். அப்படி நாங்கள் கேட்பது அந்த இசுலாமியர்களை, கிறிஸ்துவர் களை யார் என்று நீங்கள் கூறுகிறீர்கள். அவர்கள் இந்த நாட்டு மக்கள் இல்லை என்று கூறுகிறார்களா? ஒருவேளை ஜெருஸ்லேத்திலிருந்து பத்து விதை கொண்டுவந்து, அரேபியா விலிருந்து பத்து விதைக்கொண்டு இங்கே தூவி விட்டு அதில் முளைத்தவர்களா இசுலாமியர்கள். இந்த நாட்டில் வாழ்வதா? இந்த மக்களோடு மக்களாக மரியாதையோடு வாழ நினைத்தான் முடியவில்லை. இழிவுபடுத்தினீர்கள், தொடாதே என்றீர்கள், கிட்டே வராதே என்று சொன்னீர்கள். அவன் சுயமரியாதையை தேடிப் போனான். சுய மரியாதை இருக்குமிடத்திற்கு போய்ச் சேர்ந்தான். அது கிறிஸ்துவமோ அல்லது இசுலாமிய மதமோ. கிறிஸ்துவத்திற்கு கொஞ்சநாள் போனான் அங்கேயும் ஜாதியாகிவிட்டது.

இங்கு வெறும் பறையன் என்றான், அங்கு வேதங்கட்டி பறையன் என்றான், இங்கே வண்ணான் என்றால், அங்கே வேதங்கட்டி வண்ணான் என்கிறான். வேறு ஒன்றும் சொல்ல வில்லை. அடுத்து இசுலாமுக்குப் போனான் கேரளாவில் அதுதானே நடந்தது. அங்கே போய் கடையிலே சாமான் வாங்கி மாப்பிள்ளை கலவரம் நடந்ததில்ல. என்னய்யா நடந்தது? கடையில் சாமான்



வாங்கிய தாழ்த்தப்பட்டவனை அடித்தான். அவன் அதற்கு முன்னால் தான் இசுலாத்திற்கு மாறினான்னு தெரியாம போச்சு. இசுலாமியர்கள் எல்லாம் சண்டைக்கு வந்து பிரச்சனை வந்து அதன் பிறகு சமாதானம் ஆனார்கள் அது வேறு. ஆனால் இசுலாமியர்கள் ஏனென்றால் இவன் அமாவசைக்கும் அப்துல்காதருக்கும் என்னடா சம்மந்தம் என்பான். நிறைய சம்மந்தம் உண்டு. அமாவாசையாக இருந்தபோது அவமானப் படுத்தப்பட்டான். அப்துல் காதரானபோது மரியாதையோடு நடத்தப்பட்டான். இப்படி ஏகப்பட்ட சம்மந்தம் இருக்கிறது. இவன் பழமொழி சொல்லிவிட்டான். அப்துல்காதருக்கும் அம்மாவாசைக்கும் என்னடா சம்மந்தம் என்று ஏராளமான சம்மந்தம் இருக்கிறது. இந்த பழமொழிகூட சும்மா ஏமாற்றுவதற்காக சொன்ன பழமொழிகள்

இப்படித்தான். அம்மாவாசைகள் அப்துல்காதர்கள் ஆனார்கள். ஆனால் நீயயல்லாம் யாரென்றால் எந்த சம்மந்தமும் இல்லாமல் எங்கோ இருந்து வந்தவர்கள். பிழைப்புத் தேடி இங்குவந்து இவன் சொல்லுவான் மதமாற்றத்தை தடைசெய் என்று முழக்கம் சொல்லிக்கொண்டிருக்கிறான். ஒத்துக் கொள்கிறோம். மதமாற்றத்தை தடைசெய்ய வேண்டும். நீ உன்னுடைய இந்த நூல்களெல்லாம் எடுத்துவிட வேண்டும். ஏனென்றால் உன் வரலாற்றில் திருநாவுக்கரசர் யார்? அப்பராக எப்போது ஆனார். சமணர்தானே பின்னால் வந்து அப்பரானார். அவரு சைவரானார். ஆனால் குலச்சேரியார் அமைச்சரும், மங்கையற்கரசியும் சேர்ந்துகொண்டு நின்ற சேர் நெடுமாறனை, கூன்பாண்டியனை சமனமானவனை சரிவனாக அவனுக்கு சூழை நோய் உண்டாக்கலாம்னு வரலாறு சொல்லுதல்லவா! அவனை மாற்றுகிறார்கள், மாற்ற வேண்டும்மென்று துடிக்கிறார்கள். உங்கள் வரலாற்றில் எத்தனை பேரை ஆக்கியிருக்கிறார்கள். சீராப்பள்ளி என்பது என்ன? எங்கெல்லாம் சமணர்கள் வாழ்ந்தார்களே அந்த பகுதிக்குப் பேர் சீராப் பள்ளிகள். பள்ளி என்றாலே அவர்கள் வைத்ததுதான் கல்வி என்பது நம்மிடம் ஏராளமாக படித்துக்கொண்டிருந்த காலம் இருந்தது.

சங்க காலத்தில் எல்லாம் நாம் படித்துக்கொண்டிருந்தோம். நாம் நிறைய இடங்களில் சொல்வதுண்டு. ஆண்கள் படித்தார்கள், பெண்கள் படித்தார்கள், ஏனென்றால் பெண்பால் கவிஞர்கள் ஏராளமாக சங்ககால பாடல்களை எழுதியிருக்கிறார்கள்.

காக்கைப்பாடினி, நக்கண்ணை. நச்செள்ளை என்று சொன்னோம், எத்தனை பேரை சொல்லுகிறோம். அவர்களெல் லாம் சங்ககாலத்துப் பாடல்களை எழுதியிருக்கிறார்கள். வெண்ணிகுயத்தியார் எழுதியிருக்கிறார். மருத்துவன் தாமோதரன் எழுதியிருக்கிறார் கொல்லன் அழிசி எழுதியிருக்கிறார். கூலவாணிகன் சாத்தனார் எழுதியிருக்கிறார். எல்லாத் தொழில் பண்ணனவனும் எழுதியிருக்கிறார். ஆண்கள் எழுதியிருக்கிறார். வேட்டுவப்பெண் இளவெயினி எழுதியிருக்கிறார். எல்லாமே பாட்டு எழுதியிருக்கிறார்கள். எல்லா சாதிக்காரர்களும் எழுதி யிருக்கிறார்கள். விவசாயி எழுதியிருக்கிறான், ராஜா எழுதி யிருக்கிறான். எல்லோரும் பாட்டு எழுதியிருக்கிறார்கள். அப்போது கவிதை எழுதறவர்களுக்கு ஆற்றல் பெற்ற கல்வியை வேட்டுவப் பெண்ணும் ஒரு வண்ணானுக்கும், ஒரு குயத்தியும் பெற்றிருந்த இந்த தமிழ்நாட்டில் ஏன் பொதுக்கல்வி என்பது இல்லாமல் போய்விட்டது. எப்படி இல்லாமல் போனது. ஆங்கிலேயன் இந்த நாட்டிற்கு வருகிறவரை பொதுக்கல்வி அனுமதிக்கப்பட்டதா? படித்தவன் அத்தனை பேரும் ஏன் பார்ப்பானாக இருந்தார்கள். எப்போது தடுக்கப்பட்டது. இவர்கள் காலத்தில் தான் தடுக்கப்பட்டது. களப்பிரர்கள் காலத்திலும் வரலாம் வந்து சொன்னான். இது தான் இருண்ட காலம் என்று சொன்னான். களப்பிறர்கள் காலத்தில் தான் ஏராளமான இருண்ட காலம் என்று சொன்னார்.

இப்பச் சொல்ல மாட்டான். இவனுக்கு எதிராக ஏதோ குப்தர்காலம் பொற்காலம், ஏன் அவன்தான் பார்ப்பனர் களுக்கெல்லாம் பண்ணினான், உடனே அவன் காலம் பொற் காலம் என்று சொன்னான். நம்ம காலமெல்லாம் இப்போ சாவர்க்கார் எழுதிய இந்திய வரலாறு தான் புத்தகமாக வைத்திருக்கிறார்கள். பாரதிய வித்யா அவனுங்கெல்லாம் எழுதி யிருக்கிறான்கள். அதில் என்ன எழுதிருக்கிறார்கள் என்றால் அசோகர் வந்து நாட்டுக் கொடுமை செய்தான். யாகம் செய்ததை யெல்லாம் தடுத்தாராம். அவர் உயிர்பலிக் கூடாது என்று சொன்னதை யாகம் செய்வதை தடுத்தார் அசோகர். இராவணன் போன்ற அரக்கர்கள் இதை தடுத்தார்களாம். உயிர் பலிக் கூடாது என்று சொன்னால் அதனால் இவனை கொடுமைக்காரன் என்று வரலாற்றில் எழுதுகிறான். அப்படித்தான் அப்போதும் செய்தார்கள்.



எனவே நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புவது இப்படிப்பட்ட மதமாற்றங்களுக்கு ஒரு தேதி வைத்திருக்கிறாய். சிராப்பள்ளின்னு இருக்கு அப்ப சிராப்பள்ளி யெல்லாம் சமணர்களுடைய வழிப்பாட்டுத் தளங்கள். தங்கியிருந்த இடங்கள் அதுதான் திருசிராப்பாள்ளி அந்த பிள்ளையார் கோவிலின் மேலே இருப்பது திருசிராப்பள்ளி. சிராப்பள்ளி என்பதற்கு அடைச்சொல் திரு என்று வைத்தார். திருச்சிரப்பள்ளி என்பது அவர்கள் வாழ்ந்த இடம். அதுதான் இப்பொழுது உச்சிப்பிள்ளையார் கோவில் ஆகிவிட்டது. காஞ்சி காமாட்சியம்மன் கோவில் என்ன? அது சமணக்கோவில். அதற்கு வரலாறு இருக்கிறது. சிற்பங்கள் உள்ளே இருக்கின்றன. பெரியவாள், சின்னவாள் எல்லாவாளும் இருக்கிற இடம் சமணர்கோயில் அப்பொழுது நீங்கள் நானூறு ஆண்டுகளுக்கு முன் இருக்கிற வரலாற்றைப் பேசினால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த சமணர்கோயில்களை நீங்கள் கைப்பற்றிக்கொண்டீர்களே. புத்த கோயில்களை நீங்கள் கைப்பற்றிக்கொண்டிருக்கிறீர்களே அதற்கு என்ன பதில் செல்லுவீர்கள். ஒரு ஆண்டுக்கணக்கு வைத்து விடுவான். இதற்கு முன்னால் இதற்குப் பின்னால் என்று அ. மார்க்ஸ் ஒரு புத்தகத்தில் சொல்லுவார் அவன் வரலாறு எழுதும்போது கவனமாக எழுதுவான் இப்போது ஆரியர்கள் படையயடுத்து வந்தார்கள் மேய்ச்சலும் தேடி வந்தார்கள். நம்ம ஆள் வந்தான். அங்கு சண்டை வந்தது அணைகளை உடைத்தான். எல்லாம் செய்தான். வேதங்கள் அதைத்தான் சொல்கிறது.

நம்மை கொலை செய்தான் இந்த கருப்பர்களை கொலை செய்ய இந்திரனே எனக்கு சக்தி கொடு என்றான். தண்ணி போட்டான், சுராபானம், சோம பானம் குடித்தான், நம்மை கொலை செய்தான் ஆனால் அதற்கு அவன் வரலாற்றில் என்ன எழுதினான் தெரியுமா? ஆரியர் வருகை என்று எழுதுவான். மொகலாயர் வந்தால் அது படையெடுப்பாம். இவன் என்னமோ ஆரியர்களுக்கு வரவேற்பு கொடுத்து அவன் அங்கிருந்து அவன் வந்த மாதிரியும், ஆரியரின் வருகை என்றுதான் வரலாற்றில் எழுதுவான். ஆனால் இசுலாமியர் மட்டும் படையயடுத்து வந்தானாம். மொகலாயர் படையயடுப்பு, அவன் ஆரியர் வருகை என்று ஜாகிரதையாக எழுதினான். நமக்கு அது புரியாது. ஆழமாக பார்த்தால்தான் அது தெரியும் அவ்வளவு கவனமாக ஏன்னா

அவன் எழுதுகிற இடத்தில் இருந்தான். எல்லாம் படித்தவன் அவனாகதான் இருந்தான். நம்முடைய மனதை நம்மையறியாமல் திணித்து வைத்துவிட்டான். அதிலிருந்து நாம் விடுபடவேண்டும். என்று கேட்பது தான் எங்களுடைய நோக்கம். அதை நாம் புரிந்துகொள்ளவேண்டும் என்று சொல்லுவதுதான் இந்த கூட்டத்தினுடைய நோக்கம்.

ஒன்மில்லைங்க கருநாடகத்தில் எத்தனை கலவரம் நடந்திருக்கு. வள்ளுவர் சிலை வைக்க வேண்டாம் என்று சொல்லுகிறான். சரி இராஜாஜி நகர் என்று பேரு இருந்து எதிர்த் திருக்கான. இன்னும் தான் இருக்கிறது. முக்கியமான ராஜாஜி நகர், பாரதி நகர் என்று இருக்கு அதை எதிர்க்க மாட்டான். ஆனால் வள்ளுவர் சிலை அங்கே வைக்கக்கூடாது. அதுல அடையாளம் இருந்தது என்றால் அதை தமிழனாக பார்க்கிறான். அவனை யார் என்று கவலைப் படுவதில்லை. ஏனா பார்ப்பான் என்றால் அங்கு ஒரு சின்ன கலவரம் காவிரி கலவரம் நடக்கும். பெங்களூர்ல மூட்டை தூக்கிட்டு இருப்பான் நம்மாள் அவனுக்கும் அதற்கும் சம்மந்தமே இல்லை. ஆனால் அவன் தாக்கப்படுவான். ஸ்ரீ ராம் நகரிலே இருக்கிற நம் ஆள் தாக்கப்படுவான். ஏனால் அவன் தமிழன் என்கிறதாலே. 700 அய்யங்கார் பேக்கரி இருக்கு உடனே அழிச்சிருக்கானா ஏன்னா தமிழன் தான் அய்யங்காரன் பேக்கிரியெல்லாம் தமிழன் தான் வைத்திருக்கான். 700 பேக்கரி வைத்திருக்கான். ஒரு பேக்கரி தாக்கப்பட்டதில்லை, ஒரு கண்ணாடி உடைந்ததில்லை. அவ்வளவு கவனமாக அதை காப்பாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

அவ்வாறு அதை போதித்து வைத்திருக்கிறார்கள். அவனை வந்து தமிழன்னு பார்க்காத அளவிற்கு அவன் எங்கே சென்றாலும் ஜாக்கிரதையா இழுத்துக்கொள்கிறான். ஏன்னா அவன் நாடற்றவன். எங்கு போனாலும் அவன் ஆரியர்கள் தங்களை மட்டுமே பெரியார் சொல்வார். இரண்டு சொல்வர் பார்ப்பனர் களுக்கும் சுய நலம் இருக்கிறது. மனிதனுக்கும் சுய நலம் இருப்பது இயற்கை. எல்லோருக்கும் இருக்கும் தன் வாயில் உண்டால் மட்டுமே தன்னுடைய பசியாறுமென்று இருக்கிறவரை சுயநலம் இருக்கும் என்று பெரியார் சொல்லுவார். அப்பொழுது அந்த சுய நலம் எல்லோருக்கும் இருந்தது. தமிழனுக்கும் இருந்தது. ஆனால் தமிழர்களைச் சொல்லுவார் பெரியார் ஆங்கிலத்தில்



சொல்லுவார் தமிழன் Indiuidualy Selfish பார்ப்பனர்கள் Communily Selfish பார்ப்பான். ஒருவர் இரண்டு பேரை பலிகொடுத்துக்கூட ஒட்டுமொத்த சமுதாயத்தை காப்பாற்றுவான். தமிழன் அப்படியில்லை. இவன் பார்ப்பான் இரண்டு பேரும் வந்து சேர்ந்துக்குவான். ஏசார் நாங்கதான் உங்ககூட சேர்ந்து தண்ணி போட்றோம் நீங்களே பார்க்கிறீங்க இன்றைக்கு சேரிப் பெண்களிடம் எல்லாம் போரோம் நீங்களே பார்க்கிறீங்க. அப்பறம் ஏசார் எங்களை திட்டரீங்க. இவன் செய்கின்ற தவறுகளைக்கூட தவறு என்று ஒப்புக்கொள்ள மாட்டான். தான் செய்த தவறின் வழியாக தன் சமுதாயத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைகிறானாம். நான் இத்தனை செய்யரேனே தண்ணி போடரேன், எல்லாப் பெண்களிடமும் போரன், கறி சாப்பிடரான் ஏன் எங்க ஜாதியை திட்டரீங்க. இது தப்பு அப்படியயல்லாம் சொல்ல மாட்டான். அப்பறம் ஏன் எங்க ஜாதியை திட்டரீங்க அப்படி என்பதற்கு போவான் அவன். Communily Selfishஎவ்வளவுதான் இருந்தாலும். நம்மால் Indiuidualy Selfish எங்க இனத்தையே காட்டிக்கொடுத்தாலும் சேரின்னா ஒருவன் மட்டும் நல்லா இருந்தா போதும் நான் எல்லாத்தையும் காட்டிக் கொடுக்கிறேன் என்று சொல்பவன் வேறு அதை மாற்றி நாமும் தமிழர்களும் Communily Selfish ஆக இன உணர்வு உள்ளவர்களாக நாம் நம்முடைய இழிவு படுத்துவதை புரிந்துகொள்பவர்களாக சொன்னவர்தான் பெரியார். அப்படி செய்யவேண்டும் என்று சொல்லுவது தான் தந்தை பெரியார் திராவிட கழகம் என்பதை நீங்க புரிந்து கொள்ளுங்கள்.

இப்படி கொலை செய்யப்பட்டது காந்தி. கொலை செய்யப்பட்டு வந்த பின்னால் மவுண்பேட்டன் அந்த இடத்திற்கு வருகிறார். உடனே கொலை நடந்த இடத்திற்கு வருகிறார். 5.15 க்கு கொலை நடக்கிறது. 6.00 மணிக்கு முன்னால் அவர் அங்கு வருகிறார். தன்னுடைய பத்திரிகை தொடர்பாளர்களையும் தன்னுடன் அவர் கூடிக்கொண்டு வருகிறார் அங்கே போன உடனே பத்திரிகை தொடர்பாளர் கேட்கிறார் அங்கே சென்ற உடனே ஒருவன் கத்துகிறான் அந்த பத்திரிகை தொடர்பாளரின் பெயர் கேமிபப் ஜான்சன் அவரை கூட்டிக்கொண்டு செல்கிறார். கேமிபப் ஜான்சன் ஒரு புத்தகத்தில் எழுதியிருக்கிறார் ஒரு முஸ்லிம் கொன்று விட்டான் காந்தியை என்று சம்மம்

போடுகிறான். மவுண்ட் பேட்டன் போகும் போது ஆங்கிலத்தில் சொல்லுகிறான். தெரியுமா காந்தியை ஒரு முஸ்லிம் சுட்டு விட்டான் என்று சத்தம் போடுகிறான். உடனே மவுண்ட் பேட்டன் சொல்லுகிறார் முட்டாள் சுட்டது இந்து என்று உனக்கு தெரியாதா என்று 5.15 க்கு கொலை நடந்து 5.30 க்கு சொல்லிவிட்டார். ஏன் என்றால் அவர்களெல்லாம் எதிர்ப் பார்த்து இருந்தார்கள். காரணம் அதற்கு 20 நாளுக்கு முன்னாலே ஒரு முயற்சி செய்யப்பட்டது. காந்தி மீது முதலிலேயே ஒரு தாக்குதல் நடந்தது அதிலே அவர் தப்பித்துவிட்டார்.

அப்போது உள்துறை அமைச்சராக இருந்தவர் நம்முடைய மொராஜி தேசாய் அப்போதுதான் மராட்டிய மாநிலத்தில் அவர் காலத்தில் இது நடந்தது. அப்போதே இது எல்லாம் சொல்லப்பட்டது. காந்தி மீது கொலை முயற்சி நடக்கப்போகிறது என்று சொன்னார்கள். சொன்ன பின்னும் சரியான முயற்சி எடுக்கவில்லை. அவர் தாக்கியபோதும் அவரை காப்பாற்ற வில்லை. மவுண்ட் பேட்டன் தான் சொன்னார் நாங்கள் ஆங்கிலேயர்கள் காந்தியை இவ்வளவு நாள் காப்பாற்றி வைத்திருந் தோம் ஆனால் விடுதலை பெற்று ஒராண்டுக கூட உங்களால் காப்பாற்ற முடியவில்லை என்று மவுண்ட் பேட்டன் சொன்னார். விடுதலை விடுதலை என்று சொன்னிங்க வாங்கி ஒரு வருடம் கூட ஆகவில்லை ஆனா காந்தியை காப்பாற்ற முடியவில்லை என்று சொன்னார். காரணம் நம்முடைய அவர்களில் காந்தியை இந்தியன் ஆக மட்டும் பார்த்தார்கள் இந்தியன் ஆக மட்டும் பார்க்கவில்லை. அந்த நாட்டிற்கு விடுதலைக்கு போராடுகிற ஒரு மனிதனாக மட்டும் பார்த்தார்கள் அவ்வளவுதான்.

அதனால் தான் தன்னை நாட்டை விட்டு போகச் சொன்ன காந்திக்கு அவன் தனி ரயில் ஏற்படுத்திக் கொடுத்தான். காந்தி பிரச்சாரத்திற்கு போனார். இந்திய முழுவதும் பிரச்சாரம் செய்து வந்தார் காந்தி ஆங்கிலேயர் களை எதிர்த்து. வெள்ளையேனே வெளியேறு என்று இந்தியா முழுவதும் சுற்றி வந்தார். காந்தி அதற்கு தனி ரயில் ஒன்று ஏற்பாடு செய்து அந்த ரயிலிலேயே மேடை ஒன்று அமைத்து அதில் ஒலிபெருக்கி வைத்து அவர் ஒவ்வொரு இரயில்வே டேசனிலும் பேசிவிட்டு போலாம் மக்களிடம் கீழே இறங்கி சென்று ஊருக்குள்ள பேச வேண்டியதில்லை. அப்பரம் இவர் ஆட்டுப்பால் தான குடிப்பாரு



அதற்கு இரயிலிலேயே 20 வெள்ளாட்டை, ஒரு வெட்னரி டாக்டரையும் கூட அனுப்பி வைத்தான். சரோஜினி நாயுடு தான் ஒரு முறை சொன்னார்கள் காந்தியாரே உங்களை எளிமையாக வைத்துக்கொள்வதற்கு எங்களுக்கு ஏராளம் செலவாகிறது என்று சொன்னார். சரோஜினி நாயுடு என்பவர் அவர் மகள் பத்மஜா நாயுடு என்ற அவர் மகள்கூட கவர்னராக இருந்தாங்க. அந்த அம்மா கவிக்குயில் சரோஜினி நாயுடு என்று கூறுவார்கள். அந்த அம்மா காங்கிரஸ்ல இருந்துவங்க. காந்தியாரிடம் சொன்னதாக அவர்கள் வரலாற்றில் எழுதியிருக்காங்க காந்தியாரே உங்களை எளிமையாக வைத்திருக்க எங்களுக்கு ஏராளம் செலவாகிறது என்று சொன்னார்கள். ஏனென்றால் இவர் போவாரு கூட 20 ஆடு போவும் அதை பார்த்துக் கொள்ள ஒரு வெட்னரி டாக்டர் போவாரு அவர் ஆட்டுப்பால் தான் குடிப்பாரு என்று வைத்திருந் தார்கள் இதை உன்னை நாட்டை விட்டு வெளியே போ என்று சொன்ன அந்த மனிதனுக்கு ஆதிக்கவாதியாக சொன்ன ஆங்கிலேயன் செய்து கொடுத்த ஏற்பாடு ஆனால் யோக்கியன் என்று சொல்லமுடியாது. பிரிட்டிஸ்காரன் தன்னை பெருந் தன்மைக் காரணமாக காட்டி கொள்வதற்கான முயற்சியில் ஒன்று. இருந்தாலும் அவனை அனுமதித்தார்.

ஆனால் இந்த நாட்டில் எதுவும் பேசக் கூடாது என்று சொல்லி பொடா சட்டம், தடா சட்டம் போன்ற சட்டங்களை வைத்துக்கொண்டு மிரட்டுகிறார்கள். ரௌலட் சட்டம் என்று ஒன்றை கொண்டு வந்தார்கள். 6 மாதம் விசாரணை இல்லாமல் வைத்திருக்கலாம் என்று சொல்வதுதான் ரௌலட் சட்டம். 2 ஆண்டு விசாரணை இல்லாமல் வைத்திருக்கலாம் என்று சொல்லி சட்டங்களெல்லாம் வந்துவிட்டது ஒரு ஆண்டு விசாரணை இல்லாமல் வைத்திருக்கலாம் என்று தேசிய பாதுகாப்புச் சட்டம் (NSA) கொண்டு வந்தான். காலவரையன்று வைத்திருக்கலாம் என்று மிசா சட்டம் கொண்டுவந்தான். இதை எல்லாம் செய்தவர்கள் யாரென்றால் காங்கிரஸ்காரர்கள். ரௌலட் சட்டம் 6 மாதம் விசாரணை இல்லாமல் இருக்கலாம் என்று சொன்னதற்கு போராட்டம் நடத்தினான். இந்த விசாரணையில் மரண தண்டனை கொடுக்கக் கூடாது என்று ரௌலட் சட்டத்தில் வைத்திருந்தார்கள். மரண தண்டனை கொடுக்கவேண்டும என்றால் அது உயர்நீதிமன்றத்தினுடைய ஒப்புதல் பெற வேண்டும். மூன்று உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஒருமித்த கருத்தோடு அளிக்க

வேண்டும். ஒருவர் மறுத்தால் கூட மரண தண்டனை வழங்கமுடியாது. இப்படி சொல்லுவது தான் ரௌலட் சட்டம். மறுபடியும் காங்கிரஸ்காரன் எடுத்து படித்து பார்க்கட்டும்.

ஆனால் இப்போது ஒரே நீதிபதி, ஒரே மாவட்ட நீதிபதி, உயர்நீதிமன்ற நீதிபதியல்ல. மாவட்ட நீதிபதி 26 பேருக்கு தூக்குதண்டனை கொடுத்தான். இது நம்ம நாட்டு சட்டம். ஆங்கிலேயன் காலத்தில் அவன் அடக்குமுறைச் சட்டங்கள் என்று சொன்னவர்களெல்லாம் அதை விட அடக்குமுறைச் சட்டங்களை கொண்டு வந்து தங்களுக்கு எதிராக மக்கள் திரண்டு எழுந்துவிடக் கூடாது. உரிமை கேட்டுவிடக்கூடாது. ஒடுக்கப் பட்டிருப்பவர்கள் அவர் சமுதாயத்தில் இருந்தாலும் சரி, பொருளாதாரத்தில் இருந்தாலும் சரி தங்களுக்கான உரிமை களைச் கேட்டுதிரண்டு எழக்கூடாது என்பதற்காக ஆதிக்க வாதிகள் கவனமாக இந்த சட்டங்களைப் போட்டு ஒருமைப்பாடு என்று சொல்லி இன்னும் அழுத்தி வைத்திருக்கிற இந்த நிலையை, இது இப்போது இருக்கிற பாரதிய ஜனதாவுக்கு இன்னும் வாய்ப்பாக இருக்கிறது. இதை நாங்கள் சொல்லவந்ததற்கு காரணம் காங்கிரஸ் கட்சி என்பது சோனியா காந்தி தலைமையிலே இயங்குவது. திராவிடர் கழகம் பெரியார் தலைமையில் இயங்கிக்கொண்டிருந்தது. ஒரு கட்சி இன்னார் தலைமையில் இயங்குகிறது என்று. ஆனால் பாரதிய ஜனதா கட்சிக்கு நீங்க நினைப்பது போல அவர் தலைவர், இவர் தலைவர், அத்வானி இருந்தார். இவர் இருக்கிறார் ஜோசி இருந்தார். இவர் இருக்கிறார் என்று நினைக்காதீர்கள். அவர்கள் பெயருக்குத் தலைவர்கள். அவர்கள் இயக்குவது ஆர்.எஸ்.எஸ். என்பதை மறந்துவிடாதீர்கள்.

இப்போது கூட சென்ற ஆண்டு வாஜ்பாய் போய் அவர்களை சந்தித்து அவர்கள் குருதட்சனை கொடுத்தார்கள் எல்லாம் யாருக்கு என்றார் ஆர்.எஸ்.எஸ். தலைவர்களுக்கு கொடுத்தார்கள். சென்ற தேர்தலின்போது வாஜ்பாய் பி.ஜே.பி. எல்லாம் கூப்பிட்டு அவர்கள் சொன்னார்கள் நீங்கள் தேர்ந்தெடுத் தவர்களில் 76 பேருக்கு ஆர்.எஸ்.எஸ். என்றால் என்னவென்றே தெரியாது. அவனுக்கு சீட்டு கொடுத்திருக்கிறீர்கள். அடுத்தமுறை பட்டியலை எங்கள் ஒப்புதலோடுதான் வெளியிட வேண்டும் என்று சொன்னாரென்று பத்திரிகையில் செய்தி வந்தது என்று



படித்திருப்பீர்கள். பாரதிய ஜனதா ஒரு தனிக்கட்சியல்ல ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பால் இயக்கப்படுகிற ஒரு துணைக் கட்சிதான் இது. அவர்களுடைய அரசியல் புரிந்துகொள்ள வேண்டும் என்றால் இவர்களை இயக்குபவர்கள் யார் என்று தெரியவேண்டும். இயக்குபவர்களது யோக்கியதைத்தான் ஆர்.எஸ்.எஸ். உடைய முழுவடிவம் வேறு. அவர்கள் என்ன செய்தார்கள் ஒரு பக்கம் இருக்கட்டும்.

ஒன்றைச் சொல்ல வேண்டும். பயங்கரவாதம் என்று சொல்லிக்கொண்டிருக் கிறார்கள் இது ஒரு பக்கம் இருக்கட்டும். எல்லை தாண்டிய பயங்கரவாதம் என்று சொன்னார்கள் . நாங்கள் சொல்வது ஒன்று எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு ஏன் நாளை வைக்கிற, அனுமான்தான் முதலில் எல்லை தாண்டிய பயங்கரவாதி. இங்கிருந்து போய் இலங்கையில் போய் நெருப்பு வைத்திட்டு வந்தான். எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஆரம்பித்து வைத்தது அவன் தான். அவன் இந்தியாக்கரன் அவன் இலங்கையில் போய் நெருப்பு வைத்தது எல்லை தாண்டிய பயங்கரவாதம் இல்லையா. அது ராமாயணத்தில் கடைசி. நாம் சொல்லாம் இல்லையயா. இதையயல்லாம் ஊக்கப்படுத்துவது தான். அடுத்த நாட்டில் போய் இராவணன் தப்பு செய்தான் என்றால் தப்பு பண்ணுனான்ன பண்ணு, கண்ணகிக்கு கூட பெரியார். அது தான் சொன்னார்.

கேக்காம தண்டணை கொடுத்துட்டான் உன் புருசனுக் குன்னு உனக்கு கோபம் வந்திருச்சில்ல. அப்படிகூட அவன் கொடுக்கலீங்க. நம்மாளு எதையும் முழுசா படிக்காமையே பேசுவான் அவன் அந்தப் புரத்துக்கு போனான். கொண்டு வாங்கன்னு சொல்லறதுக்கு கொண்று வாங்கன்னு தப்பா சொல்லிட்டான் அதனால கொன்னுட்டான். அப்படியெல்லாம் அவன் கொல்லுல. நீ போய்பாரு என்தால் பூங்கோதை தன்கால் சிலம்பு கன்றிய கள்வன் கையது ஆகில் கொன்று அச்சிலம்பு கொணர்கன்னுதான் சொல்றான். நீ போ நான் சொல்லுற குற்றவாளிக்கிட்ட என் பொண்டாட்டி சிலம்பு இருந்ததுன்னா அவனை கொன்றுவிட்டு கொண்டுவா. திருடனை விடக்கூடாது என்று சொல்லுகிறான். அவன் தெளிவாக உத்தரவு போட்டான். இவன் சென்று கொன்று விட்டு வந்துவிட்டான். இவளுக்கு கோபம் வந்து விட்டது டே புத்திகெட்ட ராஜாவே தேரா மன்னா

செப்போதுடையன்னு சொல்லி சொன்னான். அதற்கு கலைஞர் கூட சொன்னார். இன்னொருடைய மருமகனுதான் சொன்னா ளாம். புருசன் பெயரை சொல்லவில்லை வரலாற்றில் புருசன் பெயரை சொல்லுகிறாள்.

மாசாத்து வணிகன் மகனையாகி நின்னகர் புகுந்து நின்பார் கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி கண்ணகி என்பது என்பாலேன். நீ யாருன்னு கேட்கிறான். நீர் வார் கண்ணை யாரையோ நீ கேட்கிறான் நான் யார் என்று தெரியுமாடா மாசாத்து வணிகன் மகன் கோவலன் மனைவி கண்ணகி என்றுதான் சொன்னாள். அது ஒருக்கம் இருக்கட்டும், அவள் தன் கணவனை விசாரிக்காமல் கொன்று விட்டான் என்று சொல்லறயில்லா. நீ மதுரையவே பூர கொழுத்தினியே யாரை விசாரித்துவிட்டு கொழுத்தின. பெரியார் அதைத்தான் கேட்டார் ஒரு புருசனை கொன்றதற்கு இவ்வளவு கோபம் வந்து மதுரை யிலிருப்பவர்களையயல்லாம் கொழுத்தினயே அவர்களெல்லாம் உனக்கு என்ன கெடுதல் செய்தார்கள் என்று பெரியார் கேட்டார். அதை கண்ணகி சிலைக்காக சொல்லவில்லை பொதுவாக சொல்கிறேன். கேள்விகள் என்று கேட்கிறபோது பகுத்தறிவோடு பதில் சொல்லவேண்டும் என்று சொல்லுகிறேன். அப்படி யென்றால் எல்லை தாண்டிய பயங்கரவாதம் இராமாயண காலத்திலேயே வந்துவிட்டது. அனுமார் போய் இலங்கையில் நெருப்பு வைச்சான். இராமாயணம் பாடமாக இருக்கிறது. அது இருக்கிறபோது கூட இப்போது பாரதிய ஜனதா கட்சி இப்பொழுது அதற்கு கவனமாக ஒவ்வொன்றையும் எப்படி செய்கிறான் என்றால்.

கிரகாம் ஸ்டெயின்ஸை குழந்தைகளோடு கொன்றது தெரியும். ஒன்றை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். தொழு நோய்க்காக வந்த மருத்துவர்தான். நம்ம ஆள் பத்திரிகையில் லேசாக ஒரு செய்தியைச் சொன்னான் கிறிஸ்துவப் பாதிரியார் ஸ்டெயின்ஸ் கொலையென்று போட்டுவிட்டான். எவன் செய்தியை கொடுத்தான் என்பது தெரியாது. முதலில் தெளிவாக தெரிந்துகொள்ளுங்கள். அவர் பாதிரி இல்லை. என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ளுங்கள். அவர் ஒரு மருத்துவர் (A P.)அதெல்லாம் ஒன்று கிடையாது. அவர் ஒரு மருத்துவர். தொழுநோய் மருத்துவர். அந்த செய்திகளை லேசாக



போட்டுவிட்டான். கிறிஸ்துவப் பாதிரியயன்று நம்மாள் நினைத்துக் கொள்வதற்காக அப்பொழுது இந் கிறிஸ்துவன் எதாவது செய்திருப்பான். அவன் நம்மை தெரியாமலே நமக்குள்ளே ஏதோ ஒன்று சொருகி விட்டுவிடுவான். மூளைக்குள் விலங்கு செலுத்துகிற திறமை இந்துதுவாவாதிகளுக்கு உண்டு. கிறிஸ்துவப் பாதிரியாருன்னா. சரி அவர் பாதிரியாரராகவே இருக்கட்டும். எரித்துக் கொன்றார்கள் அது பயங்கரவாதம் இல்லையா? அதற்கு நடவடிக்கை தமிழ்நாட்டு கன்னியர்கதான் அங்குபோய் எல்லாம் எட்டாத மலைகளிலே போய் கல்விப் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்களைக் கெடுத்தார்கள். பாலியல் வன்முறைக்கு ஆளாக்கினார்கள். அப்போது அதற்கு வந்து விளக்கம் சொன்னான் என்ன சொன்னான் தெரியுமா?

அதற்கு சர்மா என்பவர் தான் மத்தியபிரதேசத்தினுலுடைய பஜ்ரங்தல்னுடைய தலைவர். பாரதி ஜனதா கட்சியினுடைய முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர். அவர் சொன்னார் இந்துக்கள் எழுச்சி பெற்றதற்கு எடுத்துக்காட்டுதான் அது என்று சொன்னார். வாஜ்பாய் என்ன சொன்னார் நினைத்துப் பாருங்கள். மதமாற்றத்தை விவாதத்திற்கு விட வேண்டும் என்று சொன்னார், நீ கன்னிகளை ஏண்டா கெடுத்தாய் அவனை ஏன் எரித்தாய் என்று கேட்டால் மத மாற்றத்தைப் பற்றி பொது விவாதம் நடத்த வேண்டும் என்று கேரளாவில் வாஜ்பாய் பேசினார். கொன்னதற்கு என்ன காரணம் என்று கேட்டால் மதமாற்றத்தை பற்றி விவாதிக்க வேண்டும்னான். ஒ இவன் மதமாற்ற முயற்சி செய்த மாதிரியும் அத தடுக்கரதுக்கு போய் கொன்ன மாதிரியும் கருத்து சுதந்திரம் என்றால் என்னய்யா அவன் விருப்பபட்ட மதத்தில் அவன் இருப்பான் என்பதுதான் கருத்து சுதந்திரம்.

எந்த மதத்தையோ, கட்சியையோ, ஆட்சியையே தேர்ந்தெடுக்கும் உரிமை வயது வந்தவனுக்கு உண்டு. வயது வந்த ஒருவன் விருப்பமான கடவுளை ஏற்றுக்கொள்கிறான். இல்லையயன்றால் இல்லை என்று சொல்கிறான். இந்து மதத்தில் எத்தனை மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மதவாதியும் அவன் ஏசுவாக இருந்தாலும், நபியாக இருந்தாலும் யாராக இருந்தாலும் அந்த சூழலில் நின்று வந்த மதத்திற்கு எதிராக கிளம்பியவர் தான் யாராக இருந்தாலும் சரி ஏசுநாதராக இருந்தால் அப்பொழுது இருந்த மதவாதிக்கு எதிராக

கிளம்பியவர் தான் நபியாக இருந்தால் அப்பொழுது இருந்த மதவாதிக்கு எதிராக இருந்த புரட்சியாளர்தான். அவர்காலத்துக்கு அவர் புரட்சியாளர் அவன் அவன் காலத்துக்கு ஒன்று சொல்லு கிறான் அதாவது ஏசு நாதர் 2000 ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றியதாக தெரிந்தது. நான் வந்து சும்மா சொன்னா ஒத்துக்க மாட்டீங்க. நான் வந்து கடவுளுடைய பையன்னு சொல்லிட்ட வந்தாரு அவங்க பையம்பா. நபிகள் காலத்தில் கொஞ்சம் மக்கள் அறிவு வளர்ந்துவிட்டது. இனிமேல் பையன் என்றால் கேக்க மாட்டான். உங்க அம்மா யார் என்றுதான் கேட்பார்கள் மெசஞ்சர்ன்னு சொன்னார். நான் தூதர் கொஞ்சம் சொல்லிக் கிறான். ஆனால் நோக்கம் என்பது இருக்கிற மதத்திலுள்ள இழிவுகளை அந்த அசுத்தங்களை போக்கி சுத்தமாக்கவேண்டும் என்பது தான் நோக்கமாக இருந்தது.

அப்பொழுது வளர்ச்சி பெற பெற நாங்கள் இந்த மதத்தின் பேருள்ள அசுத்தங்களை சுத்தமாக அழித்துவிட வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். அவ்வளவுதான் வேறொன்றுமில்லை. பெரியார் ஒரு முறை கேட்டார்கள் நீங்கள் நாத்திகனா கடவுள் மறுப்பாளனா. அட நீங்கள் எல்லாருமே கடவுள் மறுப்பாளர் கள்தான். ஒரு கிறிஸ்துவனைப் பார்த்துக் கேட்டால் இசுலாமிய கடவுளை ஏற்றுக்கொள்வதில்லை. அல்லாவை ஏற்றுக்கொள்வ தில்லை. இராமனை ஏற்றுக்கொள்வதில்லை. இந்து அல்லாவை ஏற்றுக்கொள்வதில்லை. பரமபிதாவை ஏற்றுக்கொள்வதில்லை. ஒரு இசுலாமியன் இராமனையோ, சிவனையோ ஏற்றுக்கொள்ள மாட்டான். பரமபிதாவை ஏற்றுக்கொள்ள மாட்டான். இதெல் லாம் இறுக்கிறதல்லவா உனக்கு அந்த இரண்டு கடவுளில்லை. இவனுக்கு இந்த இரண்டு கடவுளில்லை. எனக்கு எந்த கடவுளு மில்லை. நீங்கள்களெல்லாம் தனித்தனியாக சொல்கிறீர்கள் அவ்வளவுதான். நீங்கள் சொல்லுவதை ஒட்டுமொத்தமாக நான் சொல்கிறேன் அவ்வளவுதான் வித்தியாசம் என்று பெரியார் சொல்கிறான். என்னய்யா நான் வித்தியாசமா சொல்லிவிட்டேன். அவன் இரண்டும் இல்லை என்கிறான். நான் மூன்றும் இல்லை என்று கூறுகிறேன் அவ்வளவுதான் வேறுபாடு என்று பெரியார் சொன்னார். ஏன்னா இதைப்போய் பெரியப் பிரச்சனையின்னு நாத்திகர்கள் நாத்திகம் பரப்பிவிட்டது நாத்திகம் வந்துவிட்டது.



இராமாயணத்தை ஒழுங்க படிங்கடா அதைத்தான் நானும் சொல்வது. இராமாயணத்தை ஒழுங்காபடித்தால் தசரதனுக்கும், இராமனுக்கும் அமைச்சராக இருந்த ஜாபாலி என்பவன் ஒரு நாத்திகன். அவன்தான் கேட்டான் இராமன் போய் தசரதனுக்கு செத்துப்போனதுக்கு தெவசம் பண்ணுகிறான் அப்பத்தான் கேட்டான் தண்ணிய தூக்கிட்டு இறைச்சி வச்சானாம். ஏன் இராம தண்ணி இரச்சி வைச்சிருக்க வீணாக்கிக் கொண்டிருக்கிறாய். இல்லை இதை என் தகப்பனுக்காக செய்கிறேன். பக்கத்தில் இருக்கிற காட்டுக்குக்கூட போவாது நீ வீசுவது உங்க அப்பா எங்கேயோ இருக்காங்கன்னு சொல்லற அங்கபோய் சேருமா. வா நேரத்தை வீணாக்காதே போகலாம் என்று சொன்னதாக வால்மீகி இராமாயணத்தில் எழுதி வைத்திருக்கிறார். அவன் ஒரு நாத்திகன் என்று நினைத்திருக்கிறான். ஜாபாலி என்பவன் ஒரு நாத்திகன் என்று எழுதி வைத்திருக்கிறான். இராமாயணத்தில் அப்ப நாத்திகன் இராமனுக்கே இருந்திருக்கிறான் அமைச்சராய். நீ என்னமோ இப்ப நாத்திகம் பெருகிப்போச்சு என்று இராம. கோபாலன் இவனும் பேசிக்கொண்டிருக்கிறன். என்ன நீங்கள் செய்வதைவிட இந்து முன்னணிக்கு நாங்கள் வைக்கிற கேள்வி. ஆர்.எஸ்.எஸ். காரர்களுக்கு நான் வைக்கிற கேள்வி. இந்துக்களே ஒன்று சேர்வீர்கள். எப்போ முஸ்லீம்களை அடிக்கறதுக்கு மட்டும். அவனுக்கு எதிராக போராடுவதற்கு மட்டுமா இந்துக்கள் ஒன்றுபடவேண்டும்.

வா அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம். நீயும் வந்து போராடு. நீயும் இந்து நானும் இந்து எல்லோருக்கும் அந்த உரிமை உண்டு என்று சொல். கோயிலுக்குள் போவதர்க்கு. இடஒதுக்கீடு கூடாது என்பது இவங்க. ஆனால் பொருளாதார அடிப்படையில் இருக்கவேண்டும். சரி வைத்துக்கொள் நாங்க சொல்வது என்னான்னா என்ன இடஒதுக்கீடு அவங்களுக்கு மட்டும் இட ஒதுக்கீடு எல்லோருக்கும் குழந்தையிருக்கு நோயாளி குழந்தைக்கு ஹார்லிக்ஸ் கொடுக்கிறோம் இதுதான் இடஒதுக்கீடு. பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை. நோயாளி குழந்தைக்கு ஹார்லிக்ஸ் தருகிறோம். நீ நல்லாயிருக்கிற குழந்தைக்கு ஏன் கொடுக்கிற என்று கேட்கிறோம். சரி இடஒதுக்கீடு தப்புன்னா எல்லாவற்றிலும் சாதி அடிப்படையே இருக்கக்கூடாது சொல்லு. சாதி அடிப்படையில் இட ஒதுக்கீடு கூடாது என்பது அரசு வேலைகளுக்கு மட்டும், கல்விக்கு மட்டும், ஆனா அர்ச்சகர் வேலைக்கு சாதி

அடிப்படையில்தான் இட ஒதுக்கீடு இருக்கவேண்டும் என்று அவன் கொள்கை. ஒரு தெளிவான நிலைக்கு வா இந்துக்களே ஒன்று சேருங்களேன்னா அதுக்கும் வா. எல்லாத்துக்கும் இந்துக்கள் ஒன்றாய் சேருவோம். இந்துக்கள் என்கிறபோது எங்களோடும் மனிதனாக எங்களோடு பழகு. எங்களையும் மனிதனாக நடத்து. இவன் சும்மா சொல்லிக்கொள்வான்.

நம்மாள் சிக்கந்தர்பத்தன் என்று ஒருத்தரை வைத்திருந் தார்கள். இவன் பி.ஜே.பி. ன்னு காட்டிக்கிறதுக்கு ஒருத்தனை வைத்திருப்பார்கள். இதோ பார் எங்களிடமும் ஒரு முஸ்லீம் இருக்கிறான் என்று காட்டுவதற்கு அவர் என்ன ஆனார்னே இப்ப தெரியிலா. சிக்கந்தர் பக்த் 13 நாள் ஆட்சியிலே மந்திரி பதவி கொடுத்தார்கள். இப்ப ஆளே காணோம் துரத்திவிட்டார்கள். சும்மா இரண்டு, மூன்று விசயங்கள் காட்டுவதற்கு வைத்திருப் பார்கள். தாழ்த்தாப்பட்டவர்களையும் தலைவர்களாக வைத்திருக் கிறோம் என்று பங்காரு லட்சுமணன், கிருபாநிதி போன்றவர் களை வைத்திருப்பார்கள். ஆனால், அவர்களுக்கு அதிகாரம் உண்டா? என்று தான் பார்க்கவேண்டும். அவர்களை மனிதனாக நடத்துகிறார்களா என்று தான் பார்க்கவேண்டும். அந்த மதம் அவர்கள் சொல்லுகிற மதம். நாங்க வந்து மதத்தை, நான் முதலில் சொல்லுவதுபோல மதத்தை மறுப்பது என்பது எங்கள் நோக்க மல்ல. ஆனால், அந்த மதம் மனிதனை மனிதனாக மதிப்பதற்கு எதிராக இருக்குமேயானால் அது மதமாக இருந்தாலும் சரி, அது நாடாக இருந்தாலும் சரி, எதுவாக இருந்தாலும் சரி, பெரியார் தான் சொன்னார். தமிழனுடைய மானத்தைக்கெடுப்பது இந்து மதம். தமிழனுடைய விடுதலையை கெடுப்பது இந்தியா. இரண்டையும் உடைக்கவேண்டும்மென்று பெரியார் சொன்னார்.

அவருக்கு என்னென்ன, எதெதெல்லாம் தமிழனை, மனிதனை இழிவுபடுத்துகிறதோ, கொடுமைபடுத்துகிறதோ அதையயல்லாம் அழிக்கவேண்டுமென்று கருதிய பெரியார் இந்து மதத்தை எதிர்த்தார். இந்து மதம் சகோதரத்துவத்தை காட்டி யிருக்குமேயானால் நாங்கள் எதிர்த்து இருக்க மாட்டோம். எனவே அப்படிப்பட்ட இந்து மதத்தின் அவலங்களைப் புரிந்து கொள்ளுங்கள். அந்த அவலங்களை நிலை நிறுத்தத் துடிக்கிற இந்துதுவ வாதிகளினுடைய உள்நோக்கத்தை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். நாம் அவர்கள் செய்தததை எத்தனையோ



படுகொலை நடந்தன. காரணமில்லாமல் தாராசிங்கை அவரல்லாம் என்னா சொன்னார்கள். அவரல்லாம் என்னமோ இந்துமதத்தை காப்பாற்ற வந்த தூதுவர்போல் அவர்களுக் கெல்லாம் மரியாதைக் கொடுத்தார்கள். இவையயல்லாம் நாம் எண்ணிப்பார்த்து உண்மையான பயங்கரவாதிகள் யார் அதற்குத்தான் வந்தேன்.

பின்லேடனை ஒரு பக்கம் பயங்கரவாதியாக காட்டி னார்கள் நாங்கள் கேட்பதுண்டு யார் பயங்கரவாதின்னா சரி அவன் அடுக்குமாடியை தாக்கினான் பயங்கரவாதின, நான் முதலில் சொன்னதுபோலத்தான் ஒரு கோவலன் செத்ததற்கு மதுரையை எரித்த கண்ணகியைப்போலத்தான். நூறுமாடிக் கட்டிடத்தை இடித்துவிட்டான் என்பதற்காக நூறு ஒருமாடிக் கட்டிடங்கள் நூறை இடித்தால் சரியாபோச்சு அப்படி ஆப்கானிஸ்த்தானையே அழிக்கிறான். அப்ப அவன் பயங்கர வாதியில்லையா? ஒருபக்கம் இன்னொன்று சொன்னான் கடாபி மேல் ஏன் தாக்குதல் நடத்தினான். 260 பேர் போன விமானத்தை இரண்டுபேர் சுட்டுவிட்டார்கள். அது யார்னா லிபியாகாரன் அவனை ஒப்படைன்னு கேட்டான். கொடுக்க மாட்டேன்னு சொன்னான். கடாபி போவதாக நினைத்துக்கொண்டு இத்தாலி விமானத்தைச் சுட்டு மக்களைக் கொன்றுவிட்டான். அதிலே போனவர்கள் 200 பேர் மாண்டுப்போனார்கள். இத்தாலிய விமானம் தவறாக சுட்டுவிட்டார்கள். அதிலே கடாவி பயணம் செய்தார் என்று கருதிக்கொண்டு அமெரிக்க இராணுவம் சுட்டது. 260 பேரை சுட்டது தப்புன்னா அப்ப 200 பேரை சுட்டது மட்டும் என்னா ஆயிற்று. அவர்களை ஒப்படைத்ததாக விசாரணை உண்டா? ஏழாயிரம் லட்சம் டாலர்கள் நட்டஈடாக கேட்டார்கள். செத்துப்போன 260 பேருக்காக கேட்டார்கள். கொடுக்கவில்லை. அப்புறம் ஒப்புதல் எல்லாம் வந்து இரண்டு பேரை ஒப்படைத்தப் பின்னரும் கூட அரசு கடாபி அரசு தரவேண்டும், லிபியா தரவேண்டும் 7000 லட்சம் டாலர்கள் என்று சொன்னார்கள். கொடுக்க மறுத்தார் என்பதற்காக அவர்கள் மீது பொருளாதார தடை விதித்தார். அவர் வீட்டின் மீது குண்டு போட்டனர். அவரின் ஒரு மகன் செத்தார்.

சரி இங்கே போபாலில் என்ன நடந்தது யூனியன் கார்பேட்டின் நிறுவனத்தினுடைய ஆண்டர்சன் அமெரிக்கா

விலேதானே இருக்கிறான். எத்தனைபேரைக் கொன்றான் அவன். குறைந்த பட்சம் இந்திய நாட்டில் யூனியன் கார்பைடு தயாரிப்புகள் எதுவும் இருக்கக்கூடாது ஆமாம். எவரடி டார்ச்சுக் கூட அவனுடையதுதான். குறைந்தபட்சம் அவன் சாமான் இங்கே விற்ககூடாதுன்னு சொல்லமுடிந்ததா நம்மால். அதுகூட சொல்ல முடியவில்லையே. 260 பேர் செத்ததற்கு பொருளாதாரத் தடை, 5000 பேர் செத்துவிட்டார்கள் அவன்போய் அமெரிக்காவில் உட்கார்ந்துகொண்டான். ஒன்றும் செய்யமுடியவில்லை. பயங்கர வாதிகூட இரட்டை விளக்கம் தருகிறார்கள். நாங்கள் சொல்வது உண்மையானது.

பயங்கரவாதிகள் யார் என்றால். இந்த நாட்டில் எங்கள் நம்பிக்கை எதுவோ அதை வைத்திருப்பவன் மட்டும்தான் நிம்மதியாக வாழவேண்டும் என்று எவன் சொல்லுகிறனோ அவன் பயங்கரவாதி. அவர்கள் தான் ஆர்.எஸ்.எஸ். காரர்கள். அவர்கள்தான் இந்துதுவவாதிகள். அதை புரிந்துகொண்டு நீங்கள் நடந்துகொள்ளுங்கள் என்று கேட்டு முடிக்கிறோம் நன்றி !